# இலக்கியக் கதைகள்

ஆசிரியர் :

வித்துவான் M. S. வேங்கடாசாரியார்,

வித்துவான் கோ. வில்வபதி,

தமிழாசிரியர்,

இந்து தியலாஜிகல் உயர்நிலைப் பள்ளி, சென்னை.

வெளியிட்டோர் :

வேங்கடராமா அண்டு கம்பெனி,

எஸ்பிளனேட், சென்னை.

1947

RangaRakes tamilnavarasam.com

# உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | மானமே பெரிதென மதித்த மன்னவன் .... | 1 |
| 2. | முல்லைக்குத் தேர் கொடுத்த நல்லோன் .... | 8 |
| 3. | புலவரைப் புரந்த புரவலன்.... .... | 15 |
| 4. | தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன் .... | 25 |
| 5. | பழகா நட்பு .... .... .... | 34 |
| 6. | அரசியல் வல்ல அறிஞன் .... .... | 44 |
| 7. | ஒருவர் பொறை இருவர் நட்பு .... | 58 |
| 8. | ஒற்றுமை வளர்த்த நற்றமிழ்ப் புலவர் .... | 69 |
| | பயிற்சி .... .... .... | 79 |
| | அரும்பத அகராதி .... .... | 81 |


RangaRakes tamilnavarasam.com




மானங்காக்க உயிர் நீத்த இரும்பொறையின் பாடலைப்
படித்துச் செங்கணான் வருந்துதல்

RangaRakes tamilnavarasam.com

# இலக்கியக் கதைகள்

## 1. மானமே பெரிதென மதித்த மன்னவன்

பழைய காலத்தில் நம் தமிழ்நாடு சேரநாடு, சோழநாடு, பாண்டியநாடு என்று மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப் பட்டிருந்தது. அந்நாடுகளைச் சேரர், சோழர், பாண்டியர் என்ற அரச பரம்பரையினர் ஆண்டுவந்தனர். சேரநாட்டைச் சிறப்புடன் ஆண்ட அரசர் பலர். அவர்களில் **சேரமான் கணைக்கால் இரும்பொறை** என்ற சேரமன்னன் சிறந்து விளங்கினான்.

சேரமான் என்பது அவனுடைய பரம்பரையைக் குறிக்கும் பட்டப் பெயர். கணைக்கால் இரும்பொறை என்பதுதான் அவன் இயற்பெயர். அம்மன்னன் சிறந்த கல்வி அறிவுடையவன்; தானே அழகான பாடல்கள் இயற்றக் கூடிய பேரறிவு படைத்தவன் அவனுடைய அறிவின் திறத்தைக் கண்டு புலவர் பலரும் வியந்தனர். அவ்வேந்தன் நற்குண நற்செயல்கள் பலவும் வாய்க்கப் பெற்றவன்; அஞ்சாமல் போர் புரியும் வீரன்; உயிரினும் மானமே சிறந்தது என்ற உயர்ந்த கொள்கை உடையவன். ஆதலால் மானமிழக்கும் செயலை அவன் ஒருநாளும் செய்தறியான்.

RangaRakes tamilnavarasam.com

இத்தகைய கொற்றவனது ஆட்சியின் கீழ் வாழும் குடிமக்கள் எந்நிலையில் இருப்பர் என்பதனைக் கூறவும் வேண்டுமோ? 'அரசன் எவ்வழி அவ்வழி குடிகள்' என்பது பழமொழி யன்றோ? அந்நகர மக்களும் அரசனிடம் உள்ள எல்லா நற்குணங்களும் நிரம்பப் பெற்றவராய் அரசனுக்கேற்ற நன்மக்களாய் விளங்கினர்.

கணைக்கால் இரும்பொறை சேரநாட்டைச் சிறப்புடன் ஆண்டு கொண்டிருந்த காலத்தில் சோழநாட்டைக் கோச் செங்கணன் என்ற சோழ அரசன் ஆண்டுவந்தான். அச் சோழமன்னன் பெருவீரன்; அரசர்கள் பலரையும் வென்று தன் கீழ்ப்படுத்தியவன்; சிறந்த சிவபக்தன்; சிவபெருமானுக்குப் பல கோவில்கள் கட்டி வழிபட்டவன்; அறிவும் ஆற்றலும் உடையவன்.

அச் சோழ மன்னனுக்கும் கணைக்கால் இரும்பொறைக்கும் எக்காரணத்தாலோ பகைமை இருந்து வந்தது. அப் பகைமை நாளடைவில் வளர்ந்து, அவ்விருவருக்கும் பெரும் போர் மூண்டது. இரு வேந்தரும் தம் நால் வகைப் படைகளுடன் திருப்போர்ப்புறம் என்ற இடத்தில் கூடினர். போர் தொடங்கியது. அலையோடு அலை மோதுவது போலக் குதிரைப் படையோடு குதிரைப் படை போரிட்டது. மலையோடு மலை தாக்குவது போல யானையும் யானையும் சமர் செய்தன. மேகமும் மேகமும் பொருவதைப் போலத் தேரும் தேரும் எதிர்த்தன. புலியும் புலியும் போர் புரிவதைப் போல வீரர்களுடன் வீரர்கள் அமர் புரிந்தார்கள். சிங்கமும் சிங்கமும் எதிர்ப்பதைப் போலச் செங்க

RangaRakes tamilnavarasam.com

ணும் இரும்பொறையும் போரிட்டனர். இப் பெரும் போர், கண்டவர்கள் எல்லோரும் அஞ்சுமாறு நீண்ட நேரம் நடந்தது. இரு திறப் படைகளிலும் பெருத்த சேதம். போரின் முடிவு கணைக்கால் இரும்பொறைக்குத் தீங்காய் முடிந்தது. செங்கணன் சேர மன்னனைச் சிறை செய்தான்.

சிறை செய்யப் பெற்ற சேர வேந்தனைச் செங்கணன் குடவாயிற்கோட்டம் என்ற ஊரில் உள்ள சிறைச்சாலையில் பாதுகாவலில் வைத்தான். சேர மன்னன் தன் நிலைமையை எண்ணி எண்ணி மனம் வருந்தினன்; மானம் இழக்கும் நிலை நேர்ந்ததை நினைத்துக் கலங்கினன். அவனடைந்த துன்பத்திற்கு ஓரளவில்லை. அக்கவலையால் அவன் உடல் நலம் மிகவும் குன்றியது. சிறைக் காவலரால் கொடுக்கப் படும் உணவினையும் அவன் உண்ண மறுத்தான். பெரு வேந்தனாகிய அவனுக்கு வந்த துன்பம் நம் நெஞ்சையே வருத்துகின்றதன்றோ!

இவ்வாறு மனக்கவலையில் மூழ்கி உணவின்றி வாடிக் கிடக்கும் அம்மன்னனுக்குத் தாங்க முடியாத நீர் வேட்கை உண்டாயிற்று. நீர் வேட்கையால் வாயுலர்ந்தது. நெஞ்சில் ஈரம் வற்றிப் பேசவும் முடியாத நிலையை அடைந்தான் அம்மன்னன். கண்கள் இருண்டன. இந்நிலையில் வேறு வழி இல்லாதவனாய் அவன் தன்னையே மறந்து சிறைக் காவலனை அழைத்துச் சிறிது நீர் தருமாறு ஈனசுரத்தோடு கேட்டான்.

அச்சிறைக் காவலன் செருக்கு மிக்கவன்; கடமை மறந்தவன்; நெஞ்சில் அன்பில்லாதவன். அத்தகைய வன்னெஞ்சனாய் இருந்ததனால் தான்

போலும் அவன் அவ்வேலைக்குத் தகுதியுடைய வனன்! நீர் வேட்கையால் வாடும் சேர மன்னனின் துன்பத்தை அறிந்தும் உடனே அவன் நீர் கொண்டுவந்து தந்தானில்லை. மன்னவனே அதற்குள் பெருந் துன்பமுற்றான்; செய்வது இன்னதென்று அறியாமல் கலங்கினன்; தன் வாயிலிருந்து சொற்கள் வெளிப்படுவதற்கு முன்னமேயே அச் சொற்கள் பிறப்படுமாறு முன்னர் ஓடிச் சென்று பணியாளர் தன் ஏவலைச் செய்ய வாழ்ந்திருந்த தன் நிலையை எண்ணி ஏங்கினன். இங்குக் கேவலம் சிறைக்காவலனால் தான் மதிக்கப்படாமையை நினைத்து அவன் மனம் பொறுக்கவில்லை. இவ்வாறு கலங்கிக் கொண்டிருக்கும் அரசன் எதிரில் நெடுநேரம் கழித்துச் சிறைக் காவலன் ஒரு பெருங் குவளையில் சிறிது நீரைக் கொணர்ந்து தன் இடக்கையால் அலட்சியமாக வைத்துச் சென்றான்.

கணைக்கால் இரும்பொறை காவலன் செயலைக் கண்டு சினங் கொண்டான். அவன் சினங் கொண்டு யாது பயன்? அவன் அரசனக இருந்த போது அவன் பணியாளரில் ஒருவன் அச்செயல் புரிந்திருப்பானயின் அவன் தலை மண்ணில் உருண்டிருக்கும். இங்கு அக்காவலன் செய்து சென்ற இத்தீச் செயல் அவன் நெஞ்சை வருத்தியது. அவ்விழிவைத் தாங்கிக்கொள்ள அவன் மனம் இசையவில்லை. போரிலேயே இறந்திருந்தால் இம் மானம் இழக்கும் நிலை தனக்கு நேராதன்றே என்று எண்ணினன். "அரசர்களில் போர்க் களத்தில் போர் செய்து இறந்தவர்களே துறக்கம் அடைவர். போரிலன்றி நோய் முதலியவைகளால் இறந்து

விட்டால் அவர் உடம்பைத் தருப்பையில் கிடத்தி வாளால் பிளந்து பின்னர் அடக்கம் செய்வார்களன்றோ! போரில் புண்பட்டு இறந்தார்கள் என்பதற் கறிகுறியாக அவ்வாறு செய்தல் வழக்கமாயிற்றே! குழந்தை இறந்து விட்டாலும் குழந்தையென்று கருதாமல் அக்குழந்தையையும் வாளால் பிளந்த பின்னரே அடக்கம் செய்வர். அத்தகைய அரச மரபில் நான் பிறந்தும் போர்க் களத்தில் பகைவன் வாளால் பிளக்கப்பட்டு இறக்காமல் அவனால் சிறை செய்யப் பட்டேனே! சங்கிலியால் கட்டி இழுத்துவரப்படும் நாய்போல் இழுத்துவரப் பெற்றேனே! 'அற்பனாகிய இக்காவலனிடம் இத் தண்ணீரை யாசிக்கக் கூடாது', என்ற மன வலிமை இல்லாமல் கெட்டேனே! என் வயிற்றுத் தீயைத் தணித்துக் கொள்ள மானமிழக்கும் இச்செயலைச் செய்வதால் அரச பரம்பரைக் கல்லவா இழுக்கு நேரும்! இவ்வாறு மானமிழந்து உயிர் வாழ்வதைக் காட்டிலும் இறப்பது மேலன்றோ!" என்று எண்ணி உயிரை விட்டு மானத்தைக் காக்க நினைத்தான் அம்மன்னவன். அதனால் காவலன் கொணர்ந்து வைத்த அந்நீரைக் கையிலெடுத்துப் பருக மனமில்லாது, 'அனலிடைப் பட்ட மெழுகென' நெஞ்சம் உருகி மேலே குறித்த கருத்தமைந்த அழகான தமிழ்ப் பாட்டொன்றைப் பாடி வைத்து விட்டு உயிர் விட்டான் அச்சேர மன்னன். என்னே அவனுடைய பெருந்தகைமை!

'மான மிழந்த பின் வாழாமை முன் இனிதே', என்று இனியவை நாற்பது என்ற நூல் எடுத்துக் கூறுகிறது.

RangaRakes tamilnavarasam.com

கவரிமான் என்பது ஒரு வகை மான். அம்மான் தன் உடலிலுள்ள மயிரொன்றை இழந்தாலும் உடனே உயிர் விடுமாம். அம் மானைப் போன்றவர்கள் மானத்தையே பொருளாக மதிக்கும் பெரியோர்கள். மானத்தை இழக்க நேர்ந்தால் உயிரைக் கொடுத்தாகிலும் அவர் மானத்தைக் காப்பர். ஆகவே திருவள்ளுவர் தம் அருமைத் திருக்குறளில்,

'மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின்'

என்று கூறியுள்ளார். அப் பொய்யா மொழிக்கு உதாரணமாய் விளங்கியவன் நம் சேரமான் கணைக்கால் இரும்பொறை! என்னே அப்பெரு வேந்தனின் மானமுடைமை!

மானத்தைக் காக்கத் தன் பெறுதற் கரிய உயிரையே இழந்த இரும்பொறையின் செயல் விரைவில் சோழன் செங்கணனுக்கு எட்டியது. ஓடோடியும் வந்தான் சிறைச் சாலைக்குச் செங்கணன். சாய்ந்து கிடக்கும் இரும் பொறையின் முகத்தைக் கண்டான். அம்முகத்தில் அப்பொழுதும் மானத்தைக் காக்க உயிரையே விட்ட வீரச் செயலின் பெருமிதத் தோற்றம் காணப்பட்டது. சோழன் மனந் திடுக்கிட்டது. அவன் நெருப்பிடைப்பட்ட புழுவெனத் துடித்தான்; மானத்திற்காக உயிரைத் துறந்த இரும்பொறையின் வீரத்தைப் பாராட்டினன்; அதே சமயத்தில் அற்பனாகிய சிறைக் காவலனுடைய தீச் செயலால் தன் செங்கோலுக்கு உண்டாகிய பெரிய இழிவைக் கருதி

RangaRakes tamilnavarasam.com

உள்ளம் குமுறினன். கணைக்கால் இரும்பொறை எழுதி வைத்த அழகிய செந்தமிழ்ப் பாட்டு அவன் கையில் அகப்பட்டது. அப்பாடலைப் படித்தான். அவன் உள்ளம் உருகியது. கண்களில் நீர் வடிந்தது. "ஒப்பற்ற புலவனும் மானியும் வீரனுமாகிய இம்மன்னவர் மணியைச் சிறை செய்து என்றென்றும் தீராப் பழியைப் பூண்டேனே!" என்று கலங்கினன். எவ்வளவு வருந்தியும் பயன் யாது? அற்பர்கள் சிலருடைய செயலாலன்றோ எத்தனையோ அரசர் தம் பெருமை இழந்தனர். அந்த நிலை சோழ வேந்தனுக்கும் எய்தியது.

மானத்துக்காக உயிர் விட்ட சேரமான் கணைக்கால் இரும்பொறையின் உடல் அழிந்தும் அவன் புகழ் இன்றும் நிலைத்திருக்கிறது; என்றும் நிலைத்திருக்கும். ஆகவே, மாணவர்களே! மானத்தைப் பெரிதாக மதியுங்கள். மானமிழக்கும் செயலைச் செய்ய முற்படாதீர்கள். மானத்தோடு வாழ்வதே தமிழர்கள் வாழ்வின்—நாகரிகத்தின்—உயர்ந்த குறிக்கோள் எனக் கொள்ளுங்கள்.



RangaRakes tamilnavarasam.com

## 2. முல்லைக்குத் தேர் கொடுத்த நல்லோன்

'மூத்துடைத்து' என்று சிறப்பித்துக் கூறப் பெறுவது பாண்டி நாடு. இப் பாண்டிய நாடுதான் செந்தமிழ் மொழியை வளர்த்த நாடுகளில் சிறந்தது. இங்குத்தான் முதற் சங்கம், இடைச் சங்கம், கடைச் சங்கம் எனத் தமிழ் வளர்த்த பெருமையை உடைய சங்கங்கள் இருந்தன. இத்தகைய பெருமை வாய்ந்த பாண்டிய நாட்டின் ஒரு பிரிவாக விளங்கியது பறம்பு நாடு என்பது.

பறம்பு மலை என்ற சிறந்த மலையொன்று அங்கு இருப்பதால் அம்மலையைச் சூழ்ந்துள்ள முந்நூறு கிராமங்கள் அடங்கிய நிலப் பகுதி பறம்பு நாடு என்ற பெயரால் அழைக்கப்பட்டு வந்தது. இப்பறம்புநாடு நீர்வளம் நிறைந்தது; வயல் வளம் செறிந்தது. பறம்பு மலையோ வற்றாத நீரூற்றுக்களையும், செறிந்த மரங்களையும் கொண்டு விளங்குவது. இனிய சுளைகளையுடைய பலாப்பழங்கள் பல வுள்ளன அம்மலையில். உண்ண உண்ணச் சுவை பயக்கும் தேனும் அதன்கண் உண்டு. இவ்வளவு வளம் நிறைந்த அம்மலை பறம்பு நாட்டு மக்களுக்குப் பயன் தரும் மலையாய் விளங்கியதில் வியப்புண்டோ? பறம்புநாடு என்று அம்மலையின் பெயரால் அந்நாட்டிற்குப் பெயரமைந்ததும் பொருந்து மன்றோ?

இத்தகைய சிறந்த நாடு ஒரு சுதந்திரச் சிற்றரசாய்த் திகழ்ந்தது; பாரி என்ற பெயரையுடைய

RangaRakes tamilnavarasam.com

சிற்றரசர் ஒருவரால் சிறப்பாக ஆளப்பட்டு வந்தது. அப்பாரி மன்னர் அன்பும் அருளும் உருவெடுத்தாற் போன்றவர்; பிறர் துன்பம் கண்டு மனம் சகியார். துன்பப்படுவது ஓரறிவுயிரை யுடைய மரம் செடி கொடிகளென்றாலும் விரைந்து அவைகளின் துன்பத்தைப் போக்குவார். இல்லையென்று அவரிடம் வந்து இரப்பவர்களுக்கு 'இல்லை' என்று கூறும் குணம் அவரிடம் இல்லை. புலவர்கள் அவரைப் பற்றிப் புகழ்ந்து பாடிப் பரிசில் வேண்டுவார்கள். பாரி அவர்களை இன் சொற் கூறி உபசரித்துக் கணக்கற்ற பொருள்களைப் பரிசாக வழங்குவார். அவருடைய வள்ளன்மையால் வாழ்வு பெற்ற புலவர் மிகப் பலர். அவர்கள் பாரியை 'மாரியைப் போல் வரையாது கொடுக்கும் வள்ளல்' எனப் புகழ்ந்து செல்வர். அவருடைய ஈகையாகிய நீர் இனிய செந்தமிழ்ப் பயிரைச் செழிப்புடன் வளர்த்து வந்தது. இத்தகைய மன்னருடைய ஆட்சியில் நாடு எவ்வாறு இருந்திருக்கும்? குடிமக்கள் எவ்வளவு மகிழ்ச்சியுடன் வாழ்ந்திருப்பர் என்பதனைக் கூறவும் இயலுமோ?

அக்காலத்தில் சிறந்து விளங்கிய புலவர் பலர். அவர்களில் சிறந்து விளங்கியவர் கபிலர் என்ற செந்தமிழ்ப் புலவர். பாரி அப்புலவருடைய அருங்குணங்களையும், அறிவின் சிறத்தையும் அறிந்து அவரைத் தம் உயிர் நண்பராகக் கொண்டார். கபிலரும் பாரியாருடைய பெருந் தன்மையையும் அளவற்ற பெருங் குணங்களையும் உணர்ந்து அவரிடம் பேரன்பு பூண்டு அவருக்கு அறிவுரை கூறும் அமைச்சராய் அமர்ந்து இனிது வாழ்ந்து வந்தார்.

RangaRakes tamilnavarasam.com

புலவராலும் புரவலராலும் புரக்கப்படும் அந்நாடு பொன்னாடாக விளங்கியது.

ஒரு நாள் குடிமக்கள் விலங்குகள், தம் பயிர்களை அழிப்பதாக முறையிட, அவ்விலங்குகளைக் கொன்று குடி மக்களின் துன்பத்தைப் போக்கப் பாரி மன்னர் தம் பரிவாரங்களுடன் வேட்டைக்குச் சென்ருர்; அங்குப் பல கொடிய வன விலங்குகளை யெல்லாம் கொன்று குவித்துப் பொழுது சாய்ந்ததும் மீண்டு தம் நகர் திரும்பினர். வேட்டையாடி மிகக் களைத்தமையால் சிறிது தனித்திருந்து இயற்கைக் காட்சிகளைக் கண்டு மகிழ அவர் விரும்பினர். அதனல் அவர் தம் அரண்மனையை யடுத்த இயற்கை வளம் நிறைந்த அழகிய பூஞ்சோலையை அடைந்தார்; பூஞ்சோலையின் வாயிலில் தம்பொன் தேரை நிறுத்தி விட்டு உள்ளே சென்று இயற்கைக் காட்சிகள் பலவற்றைக் கண்டு மகிழ்ந்தவாறே சுற்றி வந்தார்.

அங்குப் பல நிறமுடைய மலர்க் கொடிகளும், உயர்ந்து வளர்ந்து அடர்ந்திருந்த மரங்களும், பச்சைப் பசேலென விளங்கிய அழகிய செடிகளும் அவர் மனத்தைக் கவர்ந்தன. பச்சைக் கம்பளம் விரித்தாற் போன்று விளங்கும் பசும் புல் தரை நடப்பதற்கு மிருதுவாக இருந்தது. மயிலாடும் ஒருபுறம். குயில் பாடும் மற்ருெரு புறம். மான் கன்று துள்ளும் ஒரு புறம். நீர் நிறைந்த குளங்களில் உள்ள தாமரை மலர்கள் பாரியாரைக் கண்டு கைகுவித்து வணங்குவன போலப் பொழுது சாய்ந்ததும் குவியத் தொடங்கின. நீல மலர்கள் கண்களை மகிழ்ச்சியால் மலர விரித்துப் பாரியாரை வரவேற்

RangaRakes tamilnavarasam.com

பதைப் போல அழகிய நிலவைக் கண்டு மலர்ந்து தென்றல் காற்றால் அசைந்தாடின. கெண்டை மீன்கள் துள்ளிக் குதித்து வியப்பைச் செய்தன.

இத்தகைய அழகிய காட்சியில் ஈடுபட்ட பாரியார் தம் மனம் முழுவதையும் அக்காட்சியிலேயே செலுத்தித் தம்மையே மறந்திருந்தார். நெடுநேரம் சென்றதையும் அவர் உணரவில்லை. பின்னர், தம் நினைவு வந்தவராய் அக்காட்சியைக் கண்டு மகிழ்வதை விட்டுவர மனமில்லாதவராய் மீண்டார்.

வரும் வழியில் அழகிய முல்லைக் கொடி ஒன்று பற்றிப் படர்வதற்குக் கொம்பில்லாமல் காற்றில் அலைந்தாடிக் கொண்டிருந்தது. மாலை நேரமாகையால் வெண்ணிறமான முல்லை மலர்கள் அப்பொழுது தான் மலர்ந்தன. அம்மலர்களிலிருந்து வந்த உள்ளத்தைக் கவரும் நறுமணம் பாரியாரை இழுத்தது. அவர் கொடியின் அருகு சென்றார். காற்றால் அலையும் அக்கொடியைக் கண்டவுடன் அவர் மனம் இளகி விட்டது. காற்றால் அலையும் அம் முல்லைக் கொடி தன் வெண்மையான அரும்புகளாகிய பல்லைக் காட்டிக் கெஞ்சிப் பாரியைத் தன் துன்பத்தைப் போக்குமாறு கைநீட்டி அழைப்பது போல அவருக்குத் தோன்றியது. அக்காட்சி அவர் உள்ளத்தை உருகச் செய்தது. உடனே அதற்கு உதவி செய்ய வேண்டுமென்று அவர் நெஞ்சம் துடித்தது. எங்கும் சுற்றிப் பார்த்தார். அக் கொடி பற்றிப் படர்வதற் கேற்றதான ஒரு கொம்பு அவருக்குக் கிடைக்கவில்லை. அவர் நெஞ்சம் கவலை கொண்டது. அரண்மனை சென்று தக்க கொம்பு ஒன்றினை அனுப்பி உதவி செய்யலாம்

RangaRakes tamilnavarasam.com

அவ்வளவு நேரம் அக்கொடி அடையும் துன்பத்தைச் சகித்துக் கொள்ள அவரால் முடியவில்லை.

திடீரென அவர் மனத்தில் ஓர் எண்ணம் உதித்தது. அவ்வெண்ணம் தான் உலகம் உள்ள வரையிலும் அவருடைய புகழை நிலைக்கச்செய்தது. யாது அவ்வெண்ணம்! தாம் ஏறிவந்த மணிகள் கட்டப்பெற்ற அழகிய பொற்றேரையே அம் முல்லைக் கொடி பற்றிப் படர்வதற்கேற்ற கொம்பாகத் தருதல் வேண்டுமென்பதே. 'அரசனும், அவன் பொருள்களும் உலக உயிர்களின் துன்பத்தைப் போக்கவே பயன்படவேண்டும். "ஓர் உயிரின் துன்பத்தைக் கண்டும் உதவி செய்யாது தேரேறி நான் சென்றுவிட்டால் நான் எங்ஙனம் அரசனாக இருத்தற்குத் தகுதி யுடையவன் ஆவேன்?" என்று தம்மைத்தாமே கேட்டுக்கொண்டார். உடனே தம் பொற்றேரைக் கொணர்ந்து அம்முல்லைக் கொடியின் அருகில் நிறுத்தி அக் கொடியைத் தம் மலர்க்கையால் எடுத்து அத்தேரின் மீது பற்றிப் படருமாறு விடுத்தார். அப்பொழுது ஒரு முல்லை மலர் 'களுக்' கெனச் சிரிப்பது போல மலர்ந்தது. அது கண்டு பாரியாரின் உள்ளமும் மலர்ந்தது. கண்ணிமையாமல் அக்காட்சியைக் கண்டார் காவலர். 'கடமையைச் செய்து முடித்து விட்டோம்' என்ற உள்ள நிறைவு அவருக் குண்டாகியது. மகிழ்ச்சியுடன் தம் அரண்மனையைக் கால் நடையாகவே அடைந்தார் அரசர்.

இஃதன்றோ ஈகை! அவருடைய மன நிலைமை எவ்வளவு அன்பு நிறைந்தது! தூய்மையானது! துன்பப்படுவது எவ்வுயிராயிருந்தாலும் அத் துன்

பத்தைப் போக்கிக் காத்தலே மனிதர் கடமை. அக் கடமையை வழுவாது நிறைவேற்றினர் பாரி. அத் தகைய அரிய செயலால் அவருடைய திருப் பெயர் வள்ளல்கள் வரிசையில் முதன்மையாக விளங்கு கிறது. கொடைக்குப் பாரியையே ஏற்ற எடுத்துக் காட்டாகத் தமிழ் நாட்டவர் கொண்டனர். 'கொடுக் கிலாதானைப் பாரியே என்று கூறினும் கொடுப் பாரிலை' என்று சுந்தரர் தம் செந்தமிழில் பாரி யைப் புகழ்ந்து போற்றினர்.

கபிலர் என்ற புலவர் பெருமான் பின்னொரு காலத்தில் பாரியின் பெருமையைப் பற்றி ஒரு பெரிய அரசனிடம் கூறும் பொழுது,

'........பூத்தலை யறாஅப் புனைகொடி முல்லை
நாத்தழும் பேறப் பாடா தாயினும்
கறங்குமணி நெடுந்தேர் கொள்கெனக் கொடுத்த
பரந்தோங்கு சிறப்பிற் பாரி'

என்று பாரியார் முல்லைக்குத் தேரீந்த ஈகைத்திறத் தைப் புகழ்ந்து பாடினர். அவர் கூறியதன் கருத் தாவது, 'பூக்கள் மலர்வது நீங்காத அழகிய முல்லைக் கொடியானது புலவர் தம் நாத்தழும் பேறு மாறு பாரியைப் புகழ்ந்து பாடுவதைப் போலப் பாடவில்லை யென்றாலும், அதன் துயர்கண்டு ஒலிக் கின்ற மணிகள் கட்டப் பெற்ற தம் தேரை அதற்குப் பரிசாகத் தந்த உயர்ந்த புகழையுடைய பாரி' என்பதாம்.

பாரி முல்லைக்குத் தேர் கொடுத்த பெருமை புலவர் பெருமான் கபிலரால் தமிழ்நாட்டு வர லாற்று நூலிலே பொன் னெழுத்துக்களால்

RangaRakes tamilnavarasam.com

பொறிக்கப்பட்டு விட்டது. அஃது இனி என்றும் அழியாது. தமிழ்நாட்டில் உள்ள வள்ளல்களுக்கெல்லாம் வழிகாட்டியாகத் திகழ்வது அப்பெருமையே.

அன்பு மிக்க இளைஞர்களே! நாம் இவ்வுலகில் பெறவேண்டியது புகழேயாகும். அதுவே என்றும் அழியாம விருப்பது. அப்பெரும் புகழை அடைவதெங்ஙனம்? அதற்குப் பாரியாரது போன்ற ஈகைக் குணம் வேண்டும். தந்நலம் கருதாது பிறர் நலம் நாடிப் பிறர் துயரம் போக்கும் மனப்பான்மை, வேண்டும்; ஓயா உழைப்பும், உத்தமகுணங்களும், அன்பும், அருளும் வேண்டும். பாரியார் வரலாற்றைப் படித்த உங்களிடம் அச்சிறந்த பண்புகள் அரும்புவனவாக.

ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு. (திருக்குறள்)

RangaRakes tamilnavarasam.com

## 3. புலவரைப் புரந்த புரவலன்

முன் ஒரு காலத்தில் சேரநாட்டைச் செல்வக் கடுங்கோ வாழியாதன் என்ற அரசன் ஆண்டுவந்தான். அவன் சிறந்த தமிழ்ப் புலமை யுடையவன்; வீரம் செறிந்தவன். அவன் மகன் பெருஞ் சேரல் இரும்பொறை என்பவன். தந்தைக்குப் பின் தனயன் அரசுரிமை பெற்றனன். இவன் புலவர்களுக்குக் கண் போன்றவன்; வரையாது வழங்கும் வள்ளல் தன்மை யுடையவன்; வீரமும் ஈகையும் இரு கண் எனக் கருதியவன்.

அவன் காலத்தில் கடை எழு வள்ளல்களில் ஒருவனான அதியமான் என்பவன் தகடூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டுவந்தான். அதியனுடன் பெருஞ்சேரல் இரும்பொறை போர் புரிய வேண்டிய ஒரு சமயம் ஏற்பட்டது. பெருஞ்சேரல் தகடூர் மேல் படை எடுத்துச் சென்று அந்நகரை வளைத்துக்கொண்டான். கண்டோர் அஞ்சும் கடும் போர் நடந்தது. அதியன் சிறந்த வீரன்; பற்பல அமருள் வெற்றி கண்டவன். அவன் வீரர்களும் மிக்க வீர முடையவர்கள். எனினும் பெருஞ் சேரலின் முன்னின்று போர் புரியும் வலிவற்றவனானான் அதியமான். அவன் இறுதியில் பெருஞ் சேரலால் கொல்லப் பட்டான். வெற்றி பெற்றான் பெருஞ் சேரல். அவன் பெற்ற வெற்றி சாதாரண வெற்றி யன்று. புலவர் பாடும் புகழ் பெற்ற வெற்றியாகும். இவன் பெற்ற இவ்வெற்றியைச் சிறப்பித்து ஒரு நூலே பாடப் பெற்றுள்ளது. அந்நூலுக்குத் தகடூர்

RangaRakes tamilnavarasam.com

யாத்திரை என்று பெயர். இப்பெரு வெற்றியால் பெருஞ் சேரல் அன்றுமுதல் தகடூர் எறிந்த பெருஞ் சேரல் இரும்பொறை என்று பெயர் பெற்ருன்.

வீரத்தில் மட்டு மன்றி வள்ளல் தன்மையிலும் இம்மன்னன் சிறந்து விளங்கினன். ஒரு சமயம் அரிசில் கிழார் என்ற புலவர் இவன் வீரத்தையும் ஈகையையும் கேள்வியுற்று இவனைப் புகழ்ந்து பாடிப் பரிசில் பெறலாம் என்று எண்ணிவந்தார். அவர் அம் மன்னனின் பெருமைகளை எல்லாம் அமைத்து அழகிய பத்துப் பாட்டுகள் பாடினர். சேரன் அப்பாடல்களின் அழகையும், அவை களில் கூறப்படும் பொருள்களின் சிறப்பையு முணர்ந்து தன்னையே மறந்தான். தமிழ் அவன் உள்ளத்தைக் கொள்ளை கொண்டது. அரிய கவி களை இயற்றிய அரிசில் கிழார்க்கு வானத்தையும் வையத்தையும் பரிசிலாக ஈந்தாலும் போதாது என்று எண்ணினன். 'இவ்வரும் புலவர்க்கு என்ன பரிசளிப்பது' என்ற எண்ணம் அவன் மனத்திடை எழுந்தது. எழுந்தான் சேரமன்னன். தன் மனைவி யுடன் புலவர்தம் பொன்னடிகளை வணங்கி, "புல வர் மணியே! வணக்கம். தங்கள் கவிதைகளுக்குத் தக்க பரிசு இவ்வுலகில் இல்லை. மதிப்பிடமுடியாத மாணிக்கங்கள் தங்கள் ஒப்பற்ற கவிகள். இவ்வுல கில் அமைந்த செல்வங்கள் யாவற்றுள்ளும் சிறந்த செல்வம் அரசச் செல்வமே யன்ருே? அவ்வரசச் செல்வமும் தங்கள் கவிகளுக்கு ஈடாகாது. எனி னும் வேறு உயர்ந்த பொருள் இல்லாமையால் இவ் வெளிய பொருளை ஏற்றருளல் வேண்டும்," என்று

RangaRakes tamilnavarasam.com

இன்சொல் கூறி ஒன்பது நூறாயிரம் பொன்னோடு தன் அரசையே பரிசிலாக ஈந்தான். என்னே சேர மன்னனின் மாண்பு! இத்தகைய வள்ளல்களும் உளரோ! பெருஞ் சேரல் போன்ற வள்ளல்களாலன்றோ தமிழ்மொழி பண்டு தன் நிகர் இல்லாப் பெரு மொழியாகத் திகழ்ந்து வந்தது. அரசையே பரிசிலாக ஈந்தும் அது தக்க பரிசாகாது என்று வருந்திய அம் மன்னனின் தமிழ்ப் பற்றுதான் எவ்வளவு சிறந்தது! புலவர் அவனுடைய பெருங் கொடையைக் கண்டு துணுக்குற்றார். அம்மன்னன் செயல் குறித்து மகிழ்ச்சிக் கண்ணீர் சொரிந்தார். புலவர் அரசனை நோக்கி, "அரசே! வள்ளன்மைக்கும் எல்லையுண்டு. இப் பெரும் பரிசில் எனக்குத் தகாது. தங்கள் அன்பொன்றே எனக்குப் பரிசில். தாங்களே இவ்வரசை ஏற்றருளல் வேண்டும்," என்று வேண்டி அரசனிடம் அரசைத் தந்து தாம் அவனுக்கு அமைச்சராய்த் திகழ்ந்தார். இத்தகைய உயர் குணங்கள் அமையப்பெற்ற பெருஞ்சேரலின் பெருமையை விளக்கும் பிறிதோர் அருஞ்செயல் நம் அகத்தைக் கவர்வதாகப் பொலிகிறது.

அம் மன்னவன் காலத்தில் மோசி கீரனார் என்ற தமிழ்ப்புலவர் ஒருவர் வாழ்ந்துவந்தார். அவர் மிக நுண்ணறிவு படைத்தவர்; உலகியல் அறிவு நிரம்பப் பெற்றவர்; அரசியல் அநுபவம் மிகவும் அமைந்தவர்; இனிய எளிய செந்தமிழ்ப் பாடல்கள் பாடுவதில் வல்லவர். அவர் பாடல்கள், 'கேட்டார்ப் பிணிக்கும்' தன்மையன. எவ்வளவு குணங்கள் இருந்தும் பயன் என்ன? 'நாமகள் உறையும்



RangaRakes tamilnavarasam.com

இடத்தில் பூமகள் உறையாள்' என்பது நம் நாட்டில் பண்டு தொட்டு வழங்கும் முதுமொழியன்றோ? நம் புலவர் பெருமானும் அம்மொழிக்கு ஏற்ற இலக்கியமாகத் திகழ்ந்தார். வறுமை அவரை வாட்டிற்று. அவருடைய வீட்டில் அடுப்பு புகைந்து பல நாளாயின. மனைவியும் மக்களும் பட்டினியால் வருந்தி உடல் தளர்ந்து உள்ளமும் தளர்ந்தனர். குழந்தைகள் பசியின் கொடுமை தாங்காமல் தாய் முகம் நோக்கும். தாய் செய்வதறியாது இவர் முகம் நோக்குவாள். அம் முகத்தில் நிரம்பிய வேதனை தாங்க முடியாதது. எவ்வளவு நாள் இப் பெருந் துன்பத்தைப் புலவரால் தாங்குதல் இயலும்? வறுமைக்கு அவர் ஒரு முடிவுகாண விரும்பினார்.

இந்நிலையில் பெருஞ் சேரலின் பெருமையும், பெருங் கொடையும் அவர்தம் செவிப்பட்டன. பாலைவனத்திடைப் பசுமரச் சோலையைக் கண்டாற்போன்று அவர் உள்ளம் தளிர்த்தது. எங்ஙனமேனும் சேர நாடடைந்து பெருஞ் சேரலைக் கண்டு பெரும் பரிசுபெற்றுத் தம் வறுமை நோயைப் போக்கிக் கொள்ளலாம் என்ற நம்பிக்கை அவர்க்கு உண்டாகியது. கால்கள் சேர நாட்டை நோக்கி விரைந்தன. பல நாட்கள் வழி நடந்தார் புலவர். காடும் மலையும் செறிந்த கடத்தற்கரிய பெருவழியைப் பெருஞ் சேரல்பால் கொண்ட நம்பிக்கையையே துணையாகக் கொண்டு கடந்து அவர் சேர நாடடைந்தார்; அப்பொழுதே சென்று அரசனைக் காணவேண்டுமென்ற அவா வால் அரண்மனையைக் குறுகினார்.

RangaRakes tamilnavarasam.com

புலவருடைய வருகையைக் கண்ட காவலர் அவரைப் புலவர் என அறிந்து கொண்டு உள்ளே விடுத்தனர். புலவர்க்கு அடையா நெடுங்கதவும், அஞ்சல் என்ற சொல்லும் உடையவனல்லனோ நம் சேரன்! உள்ளே சென்ற புலவர் அரசன் அங்கு இல்லாமையை உணர்ந்தனர். அரசருக்குரிய வெற்றி முரசினைத் திங்களுக்கொரு முறையோ நன்னாள் களிலோ யானைமே லேற்றிச் சென்று நீராட்டு வித்து நகர் வலம் செய்வித்தல் அக்கால வழக்கம். அவ்வழக்கப்படி அரசன் அன்று நீராட்டு விழா விற்குச் சென்றிருந்தான். பணியாளர் புலவர்க்கு இச் செய்தியைக் கூறினர். அது கேட்டுப் புலவர் மனம் மிக வருந்தினர். பசியோ இவரைப் பெரி தும் வாட்டத் தொடங்கியது; நீண்டதூரம் வழி நடந்துவந்த களைப்பு வேறு; அதனால் உடல் சோர்ந்து மயங்கினர். அருகில் இருந்த அறையில் சென்று தம் களைப்பையும் மயக்கத்தையும் நீக்கிக் கொள்ளக் கருதினர். அவ்வறையில் வெண்மை யான மேல் விரிப்புப் போர்க்கப்பட்டுப் பட்டினல் தைக்கப்பட்ட மெத்தையினை யுடையதாய்க் கண் ணைக் கவரும் அழகுடன் விளங்கிய கட்டிலொன் றைக் கண்டார். அவர் உள்ளம் தம்மையும் அறி யாது அதன் மீது சென்றது. அவர் அதன்கண் அமர்ந்தார். என்றும் அதைப் போன்ற மெல்லிய கட்டிலின்கண் அமர்ந்தறியாதவ ராதலாலும், களைப்பு மிகுதியினலும் சிறிது நேரத்திற் கெல்லாம் கட்டிலிலேயே படுத்துறங்கி விட்டார் அவர். பணி யாளர்களும் இதனைக் கவனிக்கவில்லை.

RangaRakes tamilnavarasam.com

இந் நிலையில் நீராட்டு விழாவிற்குச் சென்ற பெருஞ் சேரல் முரசுக்கு நீராட்டி, பட்டாடை போர்த்து, பலவிதமான அலங்காரங்கள் செய் வித்து, யானைமீ தேற்றி, இன்னிசை முழங்க நகர் வலம் செய்வித்து அரண்மனை யடைந்தான். அரண்மனையைக் குறுகிய அரசன் முரசுகட்டில் அமைந்துள்ள இடத்திற்கு வந்தான். என்ன ஆச்சரியம்! அம்முரசு கட்டிலில் ஒட்டி உலர்ந்த வயிறும் உட்குழிந்த கண்களும் கந்தை யாடையும் உடைய புலவர் படுத்துறங்கக் கண்டான். அவரை வறிஞ ரொருவனெனக் கருதினன் மன்னன்; வியப்பும் சினமும் ஒருங்கே கொண்டான். அரச னுக்குரிய சிறந்த பொருள்களில் கொற்றக்குடையும் வெற்றி வாளும் மிகச்சிறந்தன. அரசர் முரசினை உயிரினும் சிறந்தபொருளாகக் கருதுவர். அதற் குச் செய்யப்படும் இழிவு அரசனுக்குச் செய்யப் படும் இழிவாகும். போர்க் காலங்களிலும், திரு விழாக் காலங்களிலும், திருமண நாட்களிலும் மட் டுமே அம்முரசு அறையப்படும். இப்பெருமை பொருந்திய முரசு வைக்கப்படும் கட்டிலில் தான் மோசிகீரனர் அறியாது அயர்ந்து தூங்கிவிட்டார். முரசு கட்டிலில் அமர்ந்தார்க்கு மரண தண்டனை தான் விதிக்கப்படும் என்று அவர்க்கும் தெரியும். களைப்பு மேலீட்டாலும், மயக்கத்தாலும் அவர் அதனை முரசு கட்டில் என்று உணராமல் அச்செய் யத் தகாத செயலைச் செய்து விட்டார்.

அவ் வறிஞரின் செயலைக் கண்டு பெருஞ்சினங் கொண்ட பெருஞ் சேரல் இரும்பொறை தன் உடைவாளை உருவி 'இத்தீச் செயல் புரிந்த கயவனை

RangaRakes tamilnavarasam.com


இரண்டு துண்டாக வெட்டுவேன்' என்று ஆத்திரத்துடன் புலவரைக் குறுகினான். என்னே வியப்பு! அவ்வளவு ஆத்திரம் கொண்டு சென்ற அவன் கைவாள் அவனை அறியாமல் கையினின்றும் நழுவிக் கீழே வீழ்ந்தது. அவன் கை நடுங்கியது. "என்னே! ஆத்திரத்தால் மதிகெட்டு ஓர் அருந்தமிழ்ப் புலவரைக் கொல்லச் சென்றேனே! சிறிது பதறியிருந்தால் என்ன நேரிட்டிருக்கும்! 'பெருஞ்சேரலிரும்பொறை புலவருக்குப் புகலிடம்; புலவர்களின் கண்ணீரை மாற்றும் கற்பதரு; வரையாது வழங்கும் வள்ளல்' என்று பிற்காலச் சரித்திரத்தில் என் பெயர்புகழப்படுவ தழிந்து, 'தமிழ்ப் புலவர் ஒருவரைக் கொன்றவன்,' என்ற பெரும்பழியன்றோ என்னைச் சார்ந்திருக்கும்! அப்பழி என்னேடொழிந்திருக்குமா? என்குலத்தாரையெல்லாம் சாருமன்றோ? தமிழன்னையின் சிறந்த மைந்தர்களுள் ஒருவரைக்கொன்று அவளுக்குப் பெருந்துன்பமன்றோ விளைத்திருப்பேன்! என் முன்னோர் செய்த நல்வினையே போலும் நான் இத்தீச் செயலினின்றும் தப்பினேன். இவரைப் பார்க்கும் போதே, சிறந்த தமிழ்ப்புலவரெனத் தோற்றுகிறதே! புலமையின் விளக்கத்தினை அவர் முகமே அறிவிக்கிறதே," என்று எண்ணித் தன் செய்கைக்கு நாணினான். உடனே வாயிற் காவலரை அழைத்து, "இவர்யார்?" எனக் கேட்டான். காவலர்கள், அவர் யாரென்று தெரியாதென்றும், புலவர் என்று கருதி உள்ளே விட்டதாகவும், அவர் அங்கு உறங்கியதைத் தாங்கள் கவனிக்கவில்லையென்றும் நடுங்கிக் கூறினார்கள். அரசனும் மன

RangaRakes tamilnavarasam.com

அமைதியுற்றான். பணியாளர்கள் மூலமாக மயில் தோகையால் செய்யப்பெற்ற சிறந்ததொரு கவரியைத் தருவித்தான். தானே அப்புலவர் நன்றாக உறங்குமாறு வீசத் தொடங்கினான். பெருஞ்சேரலின் தமிழன்புதான் என்னே! தமிழ்ப் புலவர்களிடம் அவன் கொண்டிருந்த பேரன்புக்கு இதனினும் வேறு எடுத்துக்காட்டு வேண்டுமோ? அவன் தான் செய்த இச் செயலால் உலகில் தனக்கென்று என்றும் அழியாத ஒரு புகழ்க் கோயிலை அமைத்துக் கொண்டான்.

அரசன் இவ்வாறு அருந்தமிழ்ப் புலவர் நன்றாக உறங்குமாறு மெல்லிய கவரிகொண்டு வீசா நிற்ப, அக்குளிர்ந்த காற்றினால் மோசிகீரனார் அங்கு நிகழ்ந்தது ஒன்றனையும் உணராதவராய் நன்றாக உறங்கிக் கண் விழித்தார். அவருக்குமுன் எழுந்தது ஓய்ந்திருந்த பெரும்பசி. பசிக் கொடுமையாலும், நெடுநேரம் உறங்கி விட்டோமே என்ற கவலையாலும் பதறி எழுந்தார் புலவர். அரசன் கவரி கைக்கொண்டு வீசிநிற்பதைக் கண்டு சொல்லொணா வியப்பினை அடைந்தார்; மருள மருள விழித்தார்; தாம் காண்பது கனவோ என்று ஐயுற்றார். இவ்வாறு கலங்கிய புலவர் காதில், "புலவரேறே! களைப்புத் தீர நன்றாக உறங்கினீர்களா?" என்ற அரசனது அன்பு கனிந்த உரை விழுந்தது. அதனால் தாம்கண்ட காட்சி உண்மையே என்று தெளிவடைந்தார் புலவர். அருகே வைக்கப்பட்டிருந்த அலங்கரிக்கப்பட்ட வீரமுரசினையும், அதனைச் சூழ்ந்து வீரர்களும் அரசன் பரிவாரங்களும் நிற்பதையும் கண்டார். அப்பொழுது

RangaRakes tamilnavarasam.com



முரசு கட்டிலில் உறங்கும் புலவர்க்குப் புரவலன் விசிறுதல்

RangaRakes
tamilnavarasam.com

தான் தாம் உறங்கியது முரசு கட்டில் என்பதனை உணர்ந்தார். முரசு கட்டிலில் ஏறுவார் அடையும் தண்டனை அவர் நினைவிற்கு வந்தது. அவர் உடல் நடுங்கியது. ஆனால் அரசன் செயலோ பெருவியப் பினை அளித்தது. அவனுடைய பேரருளும் தமி ழார்வமும் அவர் நெஞ்சைக் கவர்ந்தன. கண்கள் கண்ணீர் பொழிந்தன. அவர் அரசனது கையைப் பிடித்து வீசுவதைத் தடுத்து, "வெற்றி மன்னனே! நின் பேரருளை என்னென்று புகழ்வேன். குற்ற மற்ற வெற்றி முரசத்தை நீராட்டிக் கொணர்வதற் குள் எண்ணெயினது நுரையை முகந்து பெய்து வைத்தாற் போன்ற மெல்லிய பூக்கள் பரப்பப் பெற்ற முரசு கட்டிலில் நான் முரசு கட்டில் என்று அறியாது உறங்கினேன். இவ்வாறு பெருந் தவறு செய்த என்னை நீ நின் வாளினால் இரண்டு துண் டாக்குவதை விட்டொழிந்தாய். நீ நற்றமிழ் முழு தறிந்து தமிழையும் தமிழ்ப் புலவர்களையும் போற் றித் தமிழ் நாட்டவரால் போற்றப்படும் பெருமை யுடையவன் என்பதற்கு இச் செய லொன்றே போதாதோ? அதனோடமையாது என் அருகில் நின்று செங்கோலேந்தும் நின் திருக் கரங்களால் இக்கவரியை ஏந்தி நின்று வீசக்காரணம் என்ன? இப்பரந்த உலகில் நிறைந்த புகழை உடையவர்களுக்கல்லாமல் வானுலக வாழ்வு அமை யாது என்ற உண்மையைக் கருதியோ? புகழீட்ட எண்ணி இவ்வரிய செயலைச் செய்தனையோ?" என்று பெருஞ் சேரலின் பெருந்தன்மையை வியந்து, பலவாறு பாராட்டிப் பைந்தமிழ்ப் பாவொன்று பாடினார்.

RangaRakes tamilnavarasam.com

அப்பாடலைக் கேட்ட பெருஞ்சேரல் பெருமகிழ்வெய்தினன்; அவர் பேரறிவைக் கண்டு வியந்தான். "செந்தமிழ் நலம் கனிந்த பைந்தமிழ்ப் புலவீர்! நும்தம் தகுதிக்கு யான் கவரி கொண்டுமட்டுமா வீசலாம்? என்றென்றும் தங்கட்கு அடியவனாகவே இருந்து தமிழ்வளம் செறிந்த தீந்தமிழ்ப் பாடல்களைக் கேட்டுக் கொண்டே இருக்கலாமே." என்று பலப்பல இன்னுரைகள் நவின்று அவரை அரண்மனையுள் அழைத்துச் சென்றான்; விருந்து முதலிய சிறப்புக்கள் செய்து போற்றினன்; அவரிடம் பற்பல பொருள்பற்றிப் பேசி அளவளாவி மகிழ்ந்தான். மோசிகீரனாரும் அரசனுடைய பேரன்பையும் பெருந்தகவையும் கண்டு சிந்தை மகிழ்ந்து சில நாட்கள் அவனுடன் இன்பமாக வாழ்ந்திருந்தனர்; பின்னர் ஒரு நாள் தாம் ஊர்செல்ல வேண்டியதன் அவசியத்தையும், தம் மனைவி மக்கள்படும் துன்பத்தையும் அரசனுக்குக் குறிப்பால் உணர்த்தினர். அரசனுக்கு அப்புலவர் பெருமானை விட்டுப் பிரிய மனமே இல்லை; எனினும் அவர் குடும்பத்தின் நிலையை எண்ணி மன்னன் அவரைப் பிரியத் துணிந்தான்; திரண்ட செல்வத்தையும், விலையுயர்ந்த ஆடை அணிகளையும், பொன்னையும் மணியையும் பரிசில்களாக வழங்கினன். புலவரும் அவனை வாழ்த்திப் பிரிய மனமின்றிப் பிரிந்து சென்று தம்மூர் அடைந்து சிறப்புடன் வாழ்ந்தார்.

சிறுவர்களே! நீங்களும் பெருஞ் சேரலைப் போலத் தமிழ்மீதும், தமிழறிஞர்கள் மீதும் அன்புடையவராய்த் திகழ்வீர்களாக. அதனால் உங்களுக்கும் நன்மை உண்டு. நாட்டுக்கும் நன்மை உண்டு.

RangaRakes tamilnavarasam.com

## 4. தனக்கென வாழாப் பிறர்க் குரியாளன்

முன் காலத்தில் நம் தமிழகம் சேர, சோழ, பாண்டிய நாடுகள் என்ற முப்பிரிவுகளோடு தொண்டை நாடு, நடு நாடு, கொங்கு நாடு என வேறு முப்பிரிவுகளும் உடையதாக விளங்கியது. தற்போதைய சேலம், கோயம்புத்தூர் மாவட்டங்கள் முன்பு கொங்கு நாடு என வழங்கப்பட்டன. சேலத்திற்கு அண்மையில் தருமபுரி என்று அழகிய சிற்றூர் ஒன்று உள்ளது. அவ்வூர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தகடூர் என்ற பெயருடன் ஒரு சிறந்த தலை நகரமாக இருந்தது. இத்தகடூர் என்பது நீர் வளம் நிலவளம் வாய்க்கப் பெற்றுச் செல்வச் சிறப்புடன் பொலிந்தது.

அதியமான் என்ற குறுநில மன்னன் ஒருவன் இத்தகடூரைத் தலை நகராகக் கொண்டு அரசாண்டு வந்தான். அதியமான் நெடுமானஞ்சி என்பது அவன் முழுப் பெயர். அவன் சிறந்த குணங்களும், நிறைந்த அறிவும் உடையவன்; தமிழ் மொழி மீதும், தமிழ்ப் புலவர்கள் மீதும் எல்லையற்ற அன்புடையவன்; தமிழ் மொழியில் சிறந்த பாடல்களைப் பாடும் புலவர்களுக் கெல்லாம் பொன்னும், மணியும், பட்டும், பருத்தியும் பரிசுகளாக வழங்குவான். அவனைப் புகழ்ந்து பாடிய புலவர் மிகப் பலர். அவன் அவர்களுக்கு வழங்கிய பரிசில்களும் அளவிறந்தன. இத்தகைய கொடைக்குணம் பொருந்திய கொற்றவனாக இருந்தமையால் தான் அவன் கடை ஏழு வள்ளல்களில் ஒருவனாக மதிக்கப்பட்டான்.

RangaRakes tamilnavarasam.com

அக்காலத்தில் ஔவையார் என்ற பெண்புலவர் ஒருவர் இருந்தார். அவர் கல்வி, அறிவு, ஒழுக்கங்களில் சிறந்தவர். அவர் செந்தமிழ் மொழியில் சிறந்த புலமை யுடையவ ராதலால் சிந்தைக்கினிய செந்தமிழ்ப் பாடல்களைப் பாடியுள்ளார். அவருடைய பாடல்கள் யாவும் சொல்லழகும், பொருளழகும் உடையவை. அவர் வாய்மையும் நடுநிலைமையும் வாய்ந்தவர்; பிறர் தவறு செய்வதைக் காணப் பொறார்; அரசரே யாயினும் அஞ்சாது அவர் செய்யும் குற்றங்களை எடுத்துக் கூறி அவர்களை நல்வழிப் படுத்துவர். இவ்வளவு உயர் குணங்கள் அமையப் பெற்ற புலவரைப் பலரும் விரும்புதலுமுண்டோ! 'கற்றோர்க்குச் சென்ற விடமெல்லாம் சிறப்பு', என்பது போல ஔவையார்க்குத் தமிழ் நாடு முழுவதும் நல்ல மதிப்பு இருந்தது. முடியுடை மூவேந்தர்களும் குறுநில மன்னர்களும் அம்மூதாட்டியாரை வரவேற்றுப் போற்றினர்.

இத்தகைய நல்லிசையுடைய அந்நரை மூதாட்டியார் ஒரு முறை அதியமானைக் காண விரும்பித் தகடூரை அடைந்தனர். அதியமான் ஔவையாரை மிக அன்போடு வரவேற்று இன்மொழிகள் பல கூறி உபசரித்தான். ஔவையாரும் மனம் மிக மகிழ்ந்து பல அரிய பைந்தமிழ்ப் பாடல்களைப் பாடி அம்மன்னவனை மகிழ்வித்தார். ஔவையாருடைய அரிய புலமையைக் கண்ட அதியமான் அவரைப் பலவாறு பாராட்டினான்; ஔவையாரைச் சில நாட்கள் தன்னோடு தங்கி இருக்குமாறு அன்போடு வேண்டினான். ஔவையாரும் அரசன் அன்பைப்

RangaRakes tamilnavarasam.com

புறக்கணிக்க முடியாமல் அவனுடன் சில நாள் அளவளாவி மகிழ்ந்து தங்கி யிருந்தனர்.

நாட்கள் பல சென்றன. அதியமான் தமக்குச் சிறந்த பரிசில் வழங்குவான் என்று ஔவையார் எதிர் பார்த்திருந்தார். நெடு நாட்களாகியும் அரசன் ஒன்றுங் கொடாததால் மிக்க சினமும் வெறுப்பும் அடைந்தார்; உடனே தம்முடைய பொருள்களை யெல்லாம் கட்டி எடுத்துக் கொண்டு புறப்பட்டார். அதியமானிடம் விடை பெறவும் அவருக்கு விருப்பம் இல்லை. ஆதலால் அதியமானுடைய அரண்மனை வாயிற் காவலனைப் பார்த்து, "வாயிற் காவலனே! உன்னுடைய அரசன் புலவர்களுடைய தகுதியை நன்கு தெரிந்து கொள்ளவில்லை. இவனைத் தவிர எத்தனையோ மன்னர் எம்போன்ற புலவர்களைப் போற்றுவதற்கு உள்ளனர். உலகம் சிறந்த கொடையாளிகளை இழந்துவிட வில்லை. ஆதலால் நான் செல்கின்றேன். தச்சனுடைய சிறுவர்கள் காட்டிற்குள் சென்றால் அக்காட்டில் உள்ள மரங்கள் யாவும் அவர்கள் வெட்டிக் கொள்ளப் பயன்படுகின்றன. அது போல நான் எத்திசையில் சென்றாலும் எனக்குச் சோறு கிடைக்கும்'' என்று கூறி விட்டு நடந்தார்.

வாயிற் காவலன் ஔவையார் கூறிச் சென்ற உரைகளை ஓடோடிச் சென்று தன்னரசனுக்குத் தெரிவித்தான். உடனே அதியமான் அகம் வருந்தி விரைந்து சென்று ஔவையாரைப் போகாமல் தடுத்து அழைத்து வந்தான். அவன் ஔவையாரைப் பார்த்து, "அருந்தமிழ் வல்ல அம்மையாரே! என்னை மன்னித்தல் வேண்டும். நான் பரி-

RangaRakes tamilnavarasam.com

சில் வழங்கி விட்டால் தாங்கள் பிரிந்து சென்று விடுவீர்களன்றோ! தங்களை விட்டுப் பிரியாமல் தங்களுடன் அளவளாவி மகிழ வேண்டும் என்ற எண்ணத்தால்தான் நான் பரிசில் வழங்காமல் இருந்தேன். வேறு காரணம் இல்லை. நான் தங்கள் தகுதி யறியாதவன் அல்லன். பொறுத் தருள்க,'' என்று பணிவுடன் கூறினன்.

அரசனுடைய அன்புடைமையைக் கண்டு வியந்த ஔவையார் அவனுடைய மனம் மகிழுமாறு மேலும் பல நாட்கள் அவன் விருந்தினராகத் தங்கி இருந்தார். அப்போது அவர் கூறிய அறிவுரைகள் பல. அரசியல் நடத்தும் மன்னவன் கடமைகளை விளக்கியும், குடிமக்களிடம் எத்தகைய அன்பு செலுத்த வேண்டும் என்பதை விளக்கியும் அவர் நல்லுரைகள் பல நவின்றார். உலகமே உடலென்றும், அவ்வுலகைப் புரக்கும் புரவலனே அவ்வுடலின் உயிரென்றும் அவர் கூறிய அறிவுரை அரசனுக்கு விருந்தா யமைந்தது. அவ்வறிவுரையைப் பொன்னெனப் போற்றிய அதியமான், ''அருந்தமிழ்ப் புலவீர்! தாங்கள் கூறிய நல்லுரைகளுக்கு நன்றி. தங்களைப் போலப் புலமைத் திறமும், நாவன்மையும் ஒருங்கே படைத்த நல்லோர்களைக் காணல் அருமையினும் அருமையாம். தாங்கள் இத்தகைய நல்லுரை வழங்க நான் முற் பிறவியில் நற்றவம் செய்திருத்தல் வேண்டும்'', என்று பல வாறு புகழ்ந்தான். புகழ்ச்சியில் சிறிதும் விருப்பம் இல்லாத மூதாட்டியாரோ, ''அரசே! குழந்தைகள் மொழியும் மழலை மொழிகள் யாழோசை போல இன்பமும் தா, பொருளும் விளங்கா எனினும்

RangaRakes tamilnavarasam.com

அம்மழலைச் சொற்களை பெற்றோர்க்குக் குழலினும் யாழினும் இனியனவாகத் தோன்றும். அதுபோல என் பொருளற்ற புன்சொற்கள் புலவர்க்குப் புகலிடமாக விளங்கும் அருளாளனை நினக்குப் பொருள் மொழியாகத் தோன்றுதல் இயல்பே!” என்று பரிவுடன் மொழிந்தனர். என்னே அவருடைய பணிவுடைமை. ‘பணியுமாம் என்றும் பெருமை,’ என்ற வள்ளுவர் வாய்மொழிக்கு அவரன்றோ தக்க எடுத்துக் காட்டு! இங்ஙனமே நாள் தோறும் அதியமானுக்குப் பல அரிய கருத்துக்களைக் கூறி அவனைப் பெரிதும் மகிழ்வித்தார் அப் பெருமாட்டியார்.

இவ்வாறு இருக்கும் நாளில் அதியமான் ஒரு நாள் வேட்டை யாடுவதற்காக வனத்துக்குச் சென்றான்; வனத்தில் நெடுநேரம் வேட்டை ஆடினான்; குடிமக்களுக்குத் தீங்கு செய்யும் கொடிய விலங்குகளைக் கொன்று குவித்தான். பொழுது சாய்ந்தது. அதியமான் தன் நகர் திரும்பினான். அவன் வரும் வழியில் மலைச்சாரலில் ஒரு சிறந்த கருநெல்லி மரத்தைக் கண்டான். “இத்தகைய நெல்லி மரத்தினது பழத்தைத் தின்றவர் நீண்ட நாள் உயிர் வாழ்வர்” என்று பெரியார் ஒருவர் கூறியது அவனுக்கு அப்போது நினைவுக்கு வந்தது. எனவே அவன் கண்கள் அம்மரம் முழுதும் நன்றாய் ஆராய்ந்து பார்த்தன. மலைப் பிளப்பின் பக்கமாகச் சாய்ந்த கிளையொன்றில் ஒரே ஒரு பழம் பழுத்துத் தொங்கிக்கொண்டிருந்தது. அது கண்டு காவலன் களிப்பெய்தினான். அம்மலைப் பிளப்பை நெருங்கினான். அப்பிளப்பில் சென்று அப்பழத்

தைப் பறித்து வருதல் உயிருக்கு அபாயம் விளைக்கும் செயலாய் இருந்தது; அதற்காக அம்மன்னன் அஞ்சவில்லை; துணிவுடன் உயிரைப் பொருட்படுத்தாது சென்று அம்மலைப் பிளப்பில் இருந்த அச்சிறந்த நெல்லிக் கனியைப் பறித்தெடுத்து வந்தனன்; அகம் மிக மகிழ்ந்தனன். ஆவலுடன் அக்கனியை அருந்த எடுத்தான். திடீரென்று அவன் மனத்தில் ஓர் எண்ணம் தோன்றியது. உண்ண எடுத்த கனியை அப்படியே பத்திரப்படுத்தி வைத்துக்கொண்டு தன் நகர் சென்றடைந்தான்.

அரண்மனை அடைந்தவுடன் அதியமான் ஔவையாரை அழைத்துத் தான் மிக முயன்று பறித்த நெல்லிக் கனியை விருப்புடன் அவர்க்கு அளித்தான். ஔவையார் அரசனுடைய அன்புடைமையை எண்ணி அக்கனியை வாங்கி ஆவலுடன் உண்டார். ஔவையார் அக்கனியைச் சாதாரணமானது என்றே கருதினர். அக்கனியின் பெருமையும், அரசன் அதனைப் பெற மேற்கொண்ட முயற்சியும் அவர்க்கு எங்ஙனம் தெரியும்? அதனை அரசன் அன்பு மிகுதியால் அளித்த கனியென்றே அவர் கருதினர்.

அதியமான் பின்னர், தான் வேட்டையாடச் சென்றதையும் வரும் வழியில் சிறந்த நெல்லிக் கனியைக் கண்டதையும் எடுத்துரைத்தான்; அக்கனியை உண்டோர் நீண்ட நாள் உயிரோடு வாழ்வர் என்று பெரியார் ஒருவர் கூறியதையும், அதனால் அக்கனியைத் தான் மிக முயன்று பறித்து வந்ததையும் நவின்றான்.

RangaRakes tamilnavarasam.com

ஔவையார் அரசன் கூறிய உரைகளைக் கேட்டுத் துணுக்குற்றார்; நீண்ட நாள் வாழ்வதற்குக் காரணமான நெல்லிக்கனியைத் தானுண்ணாது தமக்களித்த அரசனுடைய செயலுக்கு வியந்தார்; "அரசே! குடிமக்களுக்குத் துன்பம் நேராமல் அன்புடன் காக்கும் அரசுரிமை பூண்ட தாங்கள் நீண்ட நாள் வாழ்ந்திருந்தால் நாட்டுக்கும், குடி மக்களுக்கும் நன்மை யுண்டாகும்; அவ்வாறு செய் யாமல் இக்கனியை எமக்களித்தமைக்குக் காரணம் என்ன? தாங்கள் செய்த இச்செயலால் எம் மனம் மிகவும் வருந்துகின்றது. இக்கனியின் பெருமையை எமக்கு முன்னரே கூறியிருக்கக் கூடாதா?" என்று அவர் மிக வருந்திக் கூறினார்.

அம்மொழி கேட்ட அரசன், "அம்மையே! இக்கனியின் இயல்பை முன்னர்த் தங்களுக்குக் கூறினால் தாங்கள் அதனை உண்ண மறுப்பீர்கள் என்று அஞ்சியே கூறவில்லை. இச்சிறந்த கனியை நான் உண்ணாமல் தங்களுக்கு அளித்ததும் ஒரு நன்மையைக் கருதியே; இக்கனியை நான் உண்டு நீண்டநாள் வாழ்ந்திருப்பின் அதனால் எனக்கும் என் நாட்டுக் குடி மக்களுக்கும் மட்டுமே நன்மை விளையும்; அதனால் பயன் என்ன? ஒப்புயர்வற்ற அருந்தமிழ்ப் புலவராகிய தாங்கள் உண்டு நீண்ட நாள் வாழ்ந்திருந்தால் என்போன்ற அரசர் பலர்க் கும் ஆதரவாக இருந்து அவர்கட்கு அறிவுரைகள் பல கூறுவீர்கள். அதனால் நன்மை பெறும் அரசர் பலர்; குடிமக்கள் பல்லாயிரவராவர். இவ்வாறு பலர்க்கும் நன்மை தரும் செயலைச் செய்யாமல் நான் வாழ நினைப்பது இழிந்த மனப்பான்மை

RangaRakes tamilnavarasam.com

யன்றோ? ஆகவே தான் அக்கனியைத் தங்களை அருந்துமாறு செய்தேன். பொறுத்து அருள்க." என்று இனிமையாக மொழிந்தான்.

அரசனுடைய உள்ளக் கருத்தை அறிந்த ஔவையார் மிக மிக வியந்தார். அதியமானுடைய தன்னலம் கருதாத் தகைமையும், மிகச் சிறந்த இக் கொடையும் அவருடைய உள்ளத்தை மிகவும் கவர்ந்தன. 'வள்ளல்களென்றால் அதியமானைப் போலன்றோ இருத்தல் வேண்டும்,' என்று கருதினார். அவர் மனம் அன்பால் நெகிழ்ந்தது. கண்கள் மகிழ்ச்சிக் கண்ணீர் உகுத்தன. வாய் வாழ்த்தத் தொடங்கியது. "பெருமானே! நீ பெரிய மலையின் உச்சியில் அமைந்த பெரிய பிளப்பில் இருந்த நெல்லியின் இனிய பழத்தை உயிரையும் பொருளாக மதியாது பறித்து வந்தாய். அதனால் அடையக்கூடிய பெரும் பேற்றினையும் எனக்குக் கூறினையில்லை. நான் சாதல் தவிர்ந்து நீடு வாழ எனக்களித்தனை அக்கனியை. என்னே நின் அருளுடைமை! நீ பால்போலும் பிறைச் சந்திரன் பொலிந்த திருமுடியினையுடைய நீல மணிமிடற்று இறைவன்போல நிலைபெற்றுவாழ்வாயாக,'' என்று அழகிய செந்தமிழ்ப்பா வொன்றால் உள்ளங் கனிய வாழ்த்தினார். அப்பாடல் புறநானூறு என்ற நூலில் சேர்க்கப்பட்டிருக்கிறது. நீங்கள் பெரியவர்களான பின்னர் அந்நூலைப் படித்து மகிழுங்கள்.

பின்னர் ஔவையார் தம்மிடம் பேரன்புடைய அதியமானிடம் மேலும் அன்புடையவராய் அவன் அவைப் புலவராகவும், அரசியலில் தக்க ஆலோ

RangaRakes tamilnavarasam.com

சனை கூறும் அமைச்சராகவும் இருந்து அதியமானை மகிழ்வித்தார்.

பிள்ளைகளே! நீங்களும் அதியமானைப் போன்று தன்னலம் கருதாது பிறர் நலம் கருதும் அருங்குணத்தை அடைய முயற்சி செய்யுங்கள். அதியமான் அடைந்த பெரும் புகழை நீங்களும் அடைவீர்கள்.



RangaRakes tamilnavarasam.com

## 5. பழகா நட்பு

பண்டைக் காலத்தில் பாண்டிய நாட்டை அடுத்துப் பிசிர் என்று அழகிய சிற்றூர் ஒன்று இருந்தது. அவ்வூர் கடற்கரையை ஒட்டி விளங்கியது; நில வளம் நிறைந்தது. அவ்வூரில் வாழ்ந்தவர்களில் பெரும்பாலோர் எல்லாத் தொழில்களிலும் சிறந்ததான உழவுத் தொழிலையே தம் சிறந்த தொழிலாகக் கொண்டிருந்த வேளாளரேயாவர். அவர்கள் அறிவும் ஒழுக்கமும் உடையவர்களாய் விருந்தினர்களைப் போற்றித் தங்கள் நாட்டினர்க்கு நல்லன செய்து சிறப்புடன் வாழ்ந்து வந்தார்கள்.

அவ்வூரில் மிகச் சிறந்து விளங்கிய வேளாளர் குடும்பமொன்றில் ஆந்தையார் என்ற பெயருடைய ஒருவர் வாழ்ந்து வந்தார். பிசிர் என்ற ஊரில் பிறந்தமையால் அவ்வூர்ப் பெயரையும் சேர்த்து அவர் பிசிராந்தையார் என்றே வழங்கப்பட்டார். அவர் இளமையிலேயே நல்ல ஆசிரியர் ஒருவரை அடுத்துச் செந்தமிழ் மொழியைச் சிறக்கக் கற்றனர்; அம்மொழியில் தக்க புலமை பெற்றனர்; அழகிய செந்தமிழ்ப் பாடல்கள் பலவற்றை இயற்றும் திறம் பெற்றார்; இதனோடு நல்லொழுக்கமும் நிரம்பப் பெற்று விளங்கினார். வள்ளுவர் கூறியதற்கிணங்க, கற்க வேண்டியவைகளைக் கற்று, கற்ற வழியிலேயே அவர் ஒழுகிவந்தார். உண்மையுடைமை, அருளுடைமை, நடுவு நிலைமை, பொறுமை என்ற நற்குணங்கள் அவரிடம் குடிகொண்டு விளங்கின. இவ்வளவு சிறந்த பெரியவராக விளங்கியதனால்

RangaRakes tamilnavarasam.com

அவ்வூரில் உள்ளோர் யாவரும் அவரிடம் மிகவும் மரியாதையுடன் நடந்து கொண்டனர்; எல்லாச் செயல்களுக்கும் அவரையே தலைவராகக் கொண்டு அவர் சொற்படி நடந்து வந்தனர்.

இவ்வளவு பெருஞ்சிறப்புடைய புலவர்க்கு மனைவியாக வாய்ந்த அம்மையாரும் எல்லா வகையிலும் அவர்க்கு ஏற்ற பெருஞ் சிறப் புடையவரே. அவர் தம் கணவர் கருத்தறிந்து நடக்கும் இயல்பிற் சிறந்து விளங்கினார்; குடும்பச் செயல்களைத் திறம் பெறச் செய்யும் வல்லமை மிக்கவர்; தம் கணவருடைய வருவாயை அறிந்து செலவு செய்யும் நல்ல பழக்க முடையவர். அவர் தம் குழந்தைகளுக்குக் கல்வி, ஒழுக்கம், உண்மையுடைமை, பெருந்தன்மை முதலிய நற்குணங்களை இளமையிலேயே கற்பித்து அவர்களை நன் முறையில் வளர்த்து வந்தார். அம் மக்களும் அறிவுடைப் பெருமக்களாய்ச் சிறந்து விளங்கினர். இவ்வளவு சிறந்த குணங்கள் வாய்க் கப் பெற்ற அம்மையார் ஒருவரை மனைவியாக அடைந்த பிசிராந்தையார்க்கு வாழ்க்கையில் துன்பமேது? கவலை என்பது சிறிது மில்லாமல் எப்பொழுதும் மகிழ்ச்சியோடு வாழ்ந்துவந்தார் புலவர். அறிவு நூல்களை ஐயந் திரிபறக் கற்பதே அவருடைய பொழுதுபோக்கு.

பிசிராந்தையார் வாழ்ந்திருந்த காலத்தில் சோழ நாட்டைக் கோப்பெருஞ் சோழன் என்ற கொற்றவன் சிறப்புடன் ஆண்டுவந்தான். அம் மன்னவன் பெரிய தமிழ்ப் புலவன்; கவி பாடும் ஆற்றலுடையவன்; பெரிய கொடையாளி. அம் மன்னவன் தமிழ்ப் புலவர்களிடம் நீங்காத பேரன்

RangaRakes tamilnavarasam.com

புடையவன். எப்பொழுதும் தமிழ் அறிஞர் பலர் அவனைச் சூழ்ந்திருப்பர். அரசியல் செயல்களை யெல்லாம் செய்து முடித்த பின்னர் அரசன் அவர் களோடு பல அரிய விஷயங்களை ஆராய்ந்து அளவ ளாவி மகிழ்வான். கோப்பெருஞ் சோழனின் பெருமையை அறிந்து பொத்தியார் என்ற செந் தமிழ்ப் புலவர் ஒருவர் அம் மன்னனிடம் பேரன்புகொண்டு அவனை விட்டுப் பிரியாமல் அன் புடை நண்பராக வாழ்ந்துவந்தார். அவரைப் போன்று எத்துணையோ புலவர்கள் அவ்வரசனுக்கு நண்பர்களாய் இருந்தார்கள்.

அப் பெரு மன்னன் பிசிராந்தையார் பெரு மையைப் புலவர் சிலர் கூறக் கேட்டனன். ஆந் தையார் அருங்குணங்களை அறிந்த புலவர்கள் விளக்கமாக எடுத்துக்கூறக் கேட்ட அம்மன்ன வன் அவர்பால் அளவில்லா அன்பு கொண்டான். அவரைக் காணவேண்டும், அவரோடு அளவளாவி மகிழ வேண்டும், என்ற ஆவல் அவனுக்கு உண் டாகியது. அது போலவே பிசிராந்தையாரும் கோப்பெருஞ் சோழனுடைய குண நலங்களைக் கேள்வியுற்று அவனிடம் அன்பு கொண்டவராய் அம்மன்னனைக்கண்டு அளவளாவ, வேண்டும் என்று ஆவல் கொண்டார். ஒருவரை ஒருவர் காணுமலும், பேசி மகிழாமலும் அவர்கள் கொண்ட நட்பு வியத்தற்குரியது. பிசிராந்தை யாரோ பாண்டிய நாட்டில் உள்ள ஒரு சிற்றூரில் வாழ்ந்து வந்தார். அரசனே அதற்கு நெடுந் தொலைவில் உள்ள சோழ நாட்டில் வாழ்ந்தான். ஒருவரை ஒருவர் காணுவது என்றால் கடினம். தற்

RangaRakes tamilnavarasam.com

காலத்தைப் போல அன்றிப் பிரயாண வசதியற்ற காலம் அது. இந்த நிலையில் கேள்வியளவில் அவ்விருவர்களிடமும் நட்பு வளர்ந்து வந்தது எனின் எத்தகைய நல்லியல்பு அவர்களிடம் இருந்திருக்க வேண்டும் என்பதை எண்ணிப் பாருங்கள்!

இவ்விருவரும் இவ்வாறு வாழ்ந்து வந்த நாளில் கோப்பெருஞ் சோழனுக்கும் அவனுடைய மைந்தர்களுக்கும் அரசாட்சி குறித்த மன மாறுபாடு ஏற்பட்டது. சிறந்த அறநெறியுடையவனும், செங்கோல் வேந்தனுமான அம்மன்னவனுக்குப் பிறந்த மைந்தர் அவனுக்கு முற்றிலும் மாறுனவர்களாய் இருந்தனர். தமிழ்ப் புலவர் பால் பேரன்புடைய தம் தந்தையாரின் செயல்களால் தம் செல்வம் யாவும் அழியும் என அவர் கருதினர்; அதனுல் தம் தந்தையாரை நீக்கி அரசைத் தாங்கள் கைப்பற்ற எண்ணினர். இஃதறிந்த கோப்பெருஞ் சோழன் அவர்களை வெறுத்து, அத்தீயவரிடம் நாட்டைத் தர மனமில்லாது, அவர்களை அழிக்கப் போர் மேற்கொண்டான். அம்மைந்தரும் போரை விரும்பினர்.

கோப்பெருஞ் சோழன் போர் மேற்கொண்டதை அறிந்த புல்லாற்றூர் எயிற்றியனார் என்ற புலவர் திடுக்கிட்டார்; விரைந்து வந்து கோப்பெருஞ் சோழனைக்கண்டார்; அவர் அரசனை நோக்கி, "அரசர் பெருந்தகையே! தங்கள் செயல் எனக்குப் பெருவியப்பை அளிக்கிறது. தாங்கள் போர் செய்து அழிக்க நினைத்தவர் தங்கட்குப் பகைவரல்லர்; நும்முடைய மைந்தர்களே; நுமக்குப்பின் நாட்டையாளும் பொறுப்புடையவர்கள். தாங்கள்

RangaRakes tamilnavarasam.com

போரில் வெற்றிகொண்டு அவர்களை அழித்து விட்டால் தங்களுக்குப் பிறகு இவ்வரசச் செல்வத்தை அடைபவர் யார்? ஆகவே நும் செயல் ஏற்புடைத்தாகத் தெரியவில்லை. இச் செயலால் உமக்கு நீங்காப் பழியே ஏற்படும். ஆதலால் நாட்டை அவரிடம் ஒப்புவித்து விட்டு அறம் மேற்கொள்வதே தக்கது. சிந்தித்துப் பார்த்துத் தெளிக," என்று அரிய பல அறிவுரைகளை எடுத்துக் கூறினார்.

எயிற்றியனார் கூறிய அவ்வுரைகளால் கோப்பெருஞ் சோழனுடைய கோபத்தீ அவிந்தது. அவன் நல்லுணர்வு பெற்றான்; புலவர் கூறிய பொன் மொழிகளை ஆய்ந்து பார்த்து அவர் கூறியவாறு செய்தலே தக்கது என்று உணர்ந்தான். உடனே தன் நாட்டைத் தன் மைந்தர்களிடம் கொடுத்து விட்டு அரண்மனையை விட்டு வெளியேறினான் வேந்தன். இவனுடன் வாழ்ந்திருந்த புலவர் யாவரும் அரசன் உறையும் இடமே தங்களுக்கும் உறைவிடம் எனக்கருதி அரசனைப் பின் தொடர்ந்தனர்.

தன் மைந்தர்கள் செயல் அம் மன்னவன் மனத்தை மிகவும் வருத்தி விட்டது. தந்தையையே எதிர்க்கத் துணிந்த அத்தீயவர்பால் நாட்டை ஒப்புவிக்க நேர்ந்தமை குறித்து அவன் பெரிதும் கவலை கொண்டான்; தான் செய்த செயலால் குடிமக்களுக்குப் பெருந் தீங்கு விளையுமே என்று கருதினான்; ஒரு பேரரசனாகிய தனக்கு இத்தீயோர் மக்களாகப் பிறந்தமை குறித்து மிகவும் நாணினான்; அந்நாணத்தைச் சகித்துக் கொள்ள முடியாமல், வாழ்வதைக் காட்டிலும் இறப்பதே மேல் என்று

RangaRakes tamilnavarasam.com

உறுதி கொண்டான். ஆதலால் அவன் அக்கால வழக்கப்படி வடக்கிருந்து உயிர்விடத் துணிந்தான்.

வடக்கிருத்தலாவது நகருக்கு வெளியே மரங்கள் செறிந்த வெட்ட வெளியிலாவது, ஆற்றங்கரையிலாவது, வடக்கு நோக்கி அமர்ந்து, உண்ணா நோன்பை மேற்கொண்டு உயிர் விடுவது. போரில் முதுகில் புண்பட்டவர்கள், பிறர் பழிக்கத் தக்க செயலைச் செய்தவர்கள் முதலியவர்கள் தாங்கள் செய்த செயலுக்கு நாணி வடக்கிருந்து உயிர் விடுதல் பண்டைக் காலத்தில் வழக்கமாக இருந்தது. அவ்வழக்கத்தையே கோப் பெருஞ் சோழனும் மேற்கொண்டான்.

அரசனைச் சுற்றி எல்லோருக்கும் இடங்கள் வகுக்கப்பட்டன. கோப் பெருஞ் சோழன் இடம் வகுக்கும் புலவர்களை நோக்கி, “அறிவிற் சிறந்தவர்களே! பாண்டிய நாட்டுப் பிசிர் என்ற ஊரில் என் ஆருயிர் நண்பர் பிசிராந்தையார் இருக்கிறார். அவரும் ஈண்டு வடக்கிருக்க வருவார். நான் துன்பமின்றி மகிழ்ச்சியோடு இருந்த காலத்தில் வாராமல் இருந்தாலும் நான் துன்பம் அனுபவிக்கும் காலத்தில் வாராதிரார். ஆதலால் அவருக்கும் என் பக்கத்தில் ஓர் இடம் ஒதுக்கி வையுங்கள்”, என்று கூறினான்.

அரசன் அவ்வாறு கூறக் கேட்ட புலவர்கள் ஆச்சரியமடைந்தார்கள். அவர்கள் அரசனை நோக்கி, “அரசர் ஏறே! தாங்கள் கூறுவது வியப்பாக இருக்கிறது. ஆந்தையாரோ வெகு தொலைவில் உள்ள பாண்டிய நாட்டில் வாழ்கிறார். நீங்கள் இருவரும் இதற்கு முன் ஒருவரை ஒருவர் பார்த்தது

RangaRakes tamilnavarasam.com

மில்லை; கேள்வியளவில் நட்புப் பூண்டிருக்கிறீர்கள். இந்நிலையில் ஆந்தையார் இங்கு வருவது எவ்வாறு இயலும்? தாங்கள் வடக்கிருக்கும் செய்தி யறிந்து வருவதாய் இருந்தாலும் பல நாட்களாகுமே," என்று கூறினார்கள்.

புலவர் உரை கேட்ட புரவலன், "பேரறிவுடையவர்களே! நீவிர் அவ்வாறு ஐயங் கொள்ள வேண்டா. பிசிராந்தையார் என்னிடம் உணர்ச்சியொத்த நட்புடையவர்; தம்முடைய பெயரைக் கூறும் பொழுதும் என்னுடைய பெயராகிய கோப் பெருஞ் சோழன் என்பதையே தம் பெயராகக் கூறும் அவ்வளவு பேரன்புடையவர். ஆதலால் அவருடைய வருகையில் ஐயங் கொள்ள வேண்டா. இப்பொழுதே வருவார். அவர்க்கு இடமொழித்து வையுங்கள்," என்று கூறி வாய்மூடுமுன், பிசிராந்தையார் அவர்களெதிரே தோன்றினார்.

நீண்ட நாட்களாகக் காண வேண்டும் என்று துடித்துக் கொண்டிருந்த பிசிராந்தையாரைக் கோப்பெருஞ் சோழன் நேரிற் கண்டான். புலவரும் அவ்வாறே அரசனைக் கண்டார். அரசன் ஓடிச் சென்று ஆந்தையாரைத் தழுவி ஆனந்தக் கண்ணீர் சொரிந்தான். அரசனுடைய பெருங் குணங்களையும், அறிவின் பெருக்கையும், பெருந்தன்மையான தோற்றத்தையும் கண்ட ஆந்தையார் தம்மையே மறந்து ஆனந்த வெள்ளத்தில் ஆழ்ந்தார்.

இக்காட்சியைக் கண்ட புலவர் யாவரும் வியப்படைந்தனர்; அரசன் கூறியது போல அவன் உரை தவறாமல் அங்கு வந்த ஆந்தையார் செயலைக்

RangaRakes tamilnavarasam.com

கண்டு அகங் களித்தனர். பொத்தியார் என்ற புலவர், "தாம் முன்னர்க் கண்டறியாத வேற்று நாட்டுஅரசனிடம் கேள்வி யளவில் கொண்ட நட்பு காரணமாக அவனோடு உயிர் துறப்பதற்காக வந்த பிசிராந்தையார் செயல் நினைக்கும் பொழுதே வியக்கத் தக்கதாயுள்ளது. இவ்வாறு புலவர் வருவார் என்று துணிந்து கூறிய அரசனுடைய தன்மையும், அவனுரை பழுதாகா வண்ணம் வந்த புலவருடைய அறிவின் திறனும் எல்லையில்லா வியப்பினை அளிக்கின்றன. இவ்வாறு தான் முன்னர்க் கண்டறியாத வேற்று நாட்டுப் புலவர் ஒருவர் மனத்தையும் தன் பால் கவர்ந்த மன்னவனை இழந்து இந்நாடு என்னுவது?" என்று கூறி அரசனைப் புகழ்ந்தார்.

கண்ணகனார் என்பவர், "பொன்னும் பவளமும், முத்தும், மணியும் எங்கெங்கோ இருப்பினும ஓர் ஆபரணம் செய்யப்படும் பொழுது அவைகள் ஒன்று சேர்தல் போலப் பெரியோர் எங்கிருந்தாலும் ஒன்று சேர்வர்," என்று கூறிப் போற்றினர்.

பின்னர், புலவர் யாவரும் பிசிராந்தையாரை நோக்கி, "பெரும் புலவரே! தங்களுக்கு வயது அதிகமாகியும் நரை தோன்றாமைக்குக் காரணம் என்ன?" என்று வியந்து கேட்டனர். அதற்குப் பிசிராந்தையார், "புலவர்களே! எனக்கு ஆண்டுகள் பல சென்றும் நரை தோன்றாமைக்குக் காரணம் கேட்பீராக. என்னுடைய மனைவி நற்குண நல்லொழுக்கங்களை உடையவள். என்னுடைய மைந்தரும் அறிவு நிறைந்தவர். என்னுடைய

RangaRakes tamilnavarasam.com

பணியாளர்கள் குறிப்பறிந்து ஏவல் செய்வார்கள். என் நாட்டு அரசனும் அறநெறி பிறழாமல் நாட்டுக்கு நல்லன செய்து காப்பாற்றுகின்றான். அதற்கும் மேலாக, நான் வாழும் ஊரிலுள்ளோர் நற்குண நல்லொழுக்கங்கள் அமையப் பெற்றவராய்ப் பணிவும், பெருந்தன்மையும் உடையவராய் விளங்குகின்றனர். ஆதலால் எனக்குக் கவலை என்பதே இல்லை. மனத்திற் கவலை இல்லாமையால் நோய் முதலியன இல்லை. நோய் முதலியன இன்மையால் நரை முதலியன உண்டாகவில்லை,'' என்று கூறினார். அவர் கூறியது புலவர்களுக்கு மகிழ்ச்சியை விளைவித்தது.

பின்னர், கோப் பெருஞ் சோழன் வடக்கிருந்தனன். புலவர் பிசிராந்தையாரும் தம் ஆருயிரனைய நண்பனுடன் உயிர் விடுவதற்காக வடக்கிருந்தனர். என்னே அவருடைய நட்பின் பெருமை! பார்க்காமலும், கூடிப் பழகாமலும், கேட்டறிந்து நட்புப் பூண்டார் அப்புலவர். அவ்வாறு கேள்வி யளவால் உண்டாகிய அந்நட்பே நண்பன் உயிர் விடுங்காலத்தில் தாமும் உயிர் துறக்கக் கூடிய உறுதியான நட்பாக விளங்கியது என்றால் எத்துணை மனப் பண்பு இருந்திருக்க வேண்டும் அவர்க்கு! வள்ளுவப் பெருந்தகையாரும் இத்தகைய உணர்ச்சி ஒத்த நட்பே சிறந்தது என்று கூறிப் புகழ்ந்துள்ளார்.

'புணர்ச்சி பழகுதல் வேண்டா ; உணர்ச்சிதான்
நட்பாம் கிழமை தரும்'

என்பது வள்ளுவர் வாக்கு.

RangaRakes tamilnavarasam.com

சோழனும் புலவரும் வடக்கிருந்து உயிர் துறந் தனர். பொத்தியார் என்ற புலவர் மட்டும் அரசன் கட்டளையை மீற முடியாமல் தம் நகர் சென்று தமக்கு மகன் பிறந்த பிறகு ஓடோடியும் வந்து, வடக்கிருந்து உயிர்துறந்த மன்னவனையும் புலவர் களையும் கண்டு வருந்தி யழுது தாமும் வடக்கிருந்து உயிர் விட்டார். அவர்களுடைய வீரச் செயலையும், பெருந்தன்மையையும், நட்பின் சிறப்பையும் கண்ட அந்நாட்டவர் அவர்களுக்குக் கல்நட்டு வழி பட்டனர். உண்மை நட்புக்கு உதாரணமாகக் கோப்பெருஞ் சோழனுக்கும் பிசிராந்தையார்க் கும் இருந்த நட்பே கூறப்படுகிறது.

பிள்ளைகளே! அத்தகைய சிறந்த குணம் உங் களிடமும் உண்டாகவேண்டும். நல்லவர்களுடைய நட்பை நீங்கள் நாடிக்கொளல் வேண்டும்; தீயவர் கள் நட்பை விலக்கவேண்டும். நட்புச் செய்தல் நிலையானதாகவும், துன்பத்தில் உதவுவதாகவும் இருத்தல் வேண்டும். அதனால் நீங்கள் நலம் பெறு வீர்கள்; நாடும் நலம் பெறும்.

RangaRakes tamilnavarasam.com

## 6. அரசியல் வல்ல அறிஞன்

'சோழ வள நாடு சோறுடைத்து' என்று ஔவையாரால் சிறப்பித்துப் பாடப்பெற்ற பெருமை யுடையது சோழநாடு. அந்நாடு பொன் கொழிக்கும் பொன்னி நதியால் புரக்கப்படுவது. ஆதலால் தான் அது வயல் வளம் சிறந்த நாடாக விளங்குகிறது. 'சோற்றால் மடையடைக்கும் சோணாடு' என்ற சொற்றொடர் சோழநாட்டின் வயல்வளத்தை நன்கு விளக்குவதாகும். நீர்வளமும் நிலவளமும் சிறந்த நாடாகையால் சோழ நாடு 'வளநாடு' என்றும், 'புனல் நாடு' என்றும் வழங்கப்பெறும். வளம் பொருந்திய நாட்டை ஆண்டமையால் சோழமன்னர் 'வளவர்' என்ற பெயரைப் பெற்றனர்.

ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னம் சோழநாட்டை இளஞ்சேட்சென்னி என்ற சோழ மன்னன் ஆண்டு வந்தான். அவன் சிறந்த போர்வீரன்; தேர்ப்படையில் சிறந்தவன்; அழகான பல தேர்களை உடையவனாக இருந்தான். அத்தேர்ப்படையின் உதவியினால பகை மன்னர் பலரை வென்று தன் அடிப்படுத்திப் பேரரசனாக விளங்கினான். ஆதலால் அவன் உருவப் பல் தேர் இளஞ்சேட்சென்னி என்று மக்களால் கொண்டாடப்பட்டான். இளையோன் என்றும் அவனுக்கு ஒரு பெயர் உண்டு. அம்மன்னனைப் புலவர்களில் மிகச் சிறந்தவரான பரணர் என்பவரும் பெருங்குன்றூர்கிழார் என்ற புலவர் பெருமானும் மிகப் புகழ்ந்து பாடியுள்ளார்கள்.

RangaRakes tamilnavarasam.com

இளஞ்சேட் சென்னி, அக்கால அரசர்கள் வேளாளர் குடியில் தோன்றிய மகளிரை மணந்தமைபோல, தானும் அழுந்தூரில் குறுநில மன்னராக விளங்கிய வேளாளர் ஒருவருடைய மகளை மணந்துகொண்டான். அந்நங்கை அழகிலும் குணத்திலும் சிறந்தவள்; அறிவும் திருவும் அமைந்தவள்; கற்பையே அணியெனப் பூண்டவள்; பெண்களுக்கு இருக்கவேண்டிய பெருங்குணங்களெல்லாம் ஒருங்கமைந்தவள். அத்தகைய நல்லாளோடு இளஞ்சேட் சென்னி ஆற்றிய இல்லறம் நல்லறமாய்த் திகழ்ந்தது என்று கூறவும் வேண்டுமோ?

சிறப்புடைய அவ்விருவரும் ஆற்றிய இல்லறத்தின் பயனாக ஓர் ஆண்மகன் பிறந்தான். அவன் பிறப்பைப் பற்றி ஒரு விசேடச் செய்தி கூறப்படுகிறது. முக்காலமும் உணர்ந்து உரைக்க வல்ல நிமித்திகன் ஒருவன் சிறந்த நேரம் ஒன்று குறிப்பிட்டு, 'அந்த நேரத்தில் ஆண்மகன் பிறந்தால் அவன் பிற நாடுகளையெல்லாம் வென்று அடிப்படுத்தி உலகம் புகழும் பேரரசனாக விளங்குவான்' என்று கூறினன். அவ்வாண்மகன் நிமித்திகன் குறிப்பிட்ட அந்த நேரத்திலேயே பிறந்தனன். ஆதலால் அவன் 'பிறக்கும்போதே அரச உரிமையுடன் பிறந்தவன்' என்று மக்களால் கொண்டாடப்பட்டான். அத்தகைய சிறந்த மகனைப் பெற்ற தாய் தந்தையர் அடைந்த மகிழ்ச்சிக்கோர் அளவுமுண்டோ? இளஞ்சேட் சென்னி தன் அருமை மகனின் நல்வாழ்வு குறித்து அறம் பல புரிந்தான். ஏழைகட்குப் பொன்னும் மணியும் பரிசில்களாக

RangaRakes tamilnavarasam.com

வழங்கினான். அம்மன்னன் மகனும் இனிதே வளர்ந்து வந்தான்.

இளஞ்சேட் சென்னியிடம் அவன் தாயாதியரான சோழ மரபினர் சிலர் பொறாமையால் பகை கொண்டிருந்தனர். அந்நிலையில் உலகம் புகழும் ஒப்பற்ற மகன் ஒருவன் தோன்றியமை அவர்கள் பொறாமைத் தீயைக் கொழுந்து விட்டெரியச் செய்தது. அப் பகைவர் இளஞ்சேட் சென்னியையும், அவன் மனைவியையும், அவர்களுக்குப் பிறந்த அவ்வாண் மகனையும் ஒழித்துவிடச் சூழ்ச்சி செய்தனர். அவர்கள் செய்த சதியால் இளஞ்சேட் சென்னியும், அவன் மனைவி அழுந்தூர் வேண்மாளும் அநியாயமாகக் கொல்லப்பட்டனர். அழுந்தூர் வேண்மாளின் உடன் பிறந்தவராகிய இரும்பிடர்த்தலையார் என்ற புலவர் பெருமான் தக்க சமயத்தில் வந்து உதவி செய்தமையால் அவர்களுக்குப் பிறந்த சிறந்த மைந்தன் மட்டும் உயிர் பிழைத்தனன். இரும்பிடர்த்தலையார் தம தங்கை மைந்தனைப் பிறர் அறியாமல் கண்ணை இமை காப்பதுபோல் காத்து வந்தனர். அவன் அப்புலவர் பெருமானிடம் அருங்கலை பலவும் பயின்று தேர்ந்தான்; அரசர்க்குரிய படைக்கலப் பயிற்சியில் சிறந்து விளங்கினான்; வாட்போரிலும், மற்போரிலும் தனக்கிணை தானேயாக விளங்கினான்; கல்வியில் மட்டுமன்றி உயர்குணங்களும் நிரம்பப் பெற்றுத் திகழ்ந்தான். அன்பும் அருளும் அவனிடம் குடிகொண்டிருந்தன.

தாங்கள் செய்த சூழ்ச்சியில் இளஞ்சேட் சென்னியின் மைந்தன் சாகாமல் தப்பியது அவன் பகைவர்களுக்குத் தெரிந்தது. அவன் உயிரோ

RangaRakes tamilnavarasam.com

டிருப்பது பின்பு தங்களுக்குப் பெருந்தீங்காய் முடியுமென்று அவர்கள் கருதினார்கள். ஆகவே எங்ஙனமேனும் அச்சிறுவனைக் கைப்பற்றி ஒழித்துவிட முடிவு செய்தனர். அதன்படியே அச் சிறுவனைத் தந்திரத்தால் சிறைப்படுத்திக் காவலில் வைத்தனர். சிறைப்பட்ட அவ்வீர மைந்தன் தன் நிலையை எண்ணி எண்ணி வருந்தினான்; தன் தாய் தந்தையரை நினைத்துப் புலம்பினான்; தன் அருமை அம்மான் இரும்பிடர்த் தலையாரைப் பிரிந்து வருந்த நேரிட்டதை எண்ணிக் கலங்கி னான்; எங்ஙனமேனும் அச்சிறையினின்றும் விடு பட்டுத் தன் பகைவர்களை அடியோடு ஒழிக்க வேண்டுமென்று உறுதிகொண்டான். இரும்பிடர்த் தலையாரும் கன்றைப் பிரிந்த கறவை போலத் தம் அருமைத் தங்கை மைந்தனைப் பிரிந்து தத்தளித் தார்; அவனை விடுவிப்பதற் கேற்ற வழிகளை நாடினார்.

இந் நிலையில் பொறாமை கொண்ட பகைவர்களோ அவ்விளைஞனிருந்த சிறைக்கூடத்தைத் தீயிட்டுக் கொளுத்தினர். நாற்புறமும் பெருந்தீ சூழ்ந்துகொண்டது. கண்டான் இளைஞன். அழுக்காறு கொண்டு அற்பர்களிழைத்த இத்தீச் செயல் அவன் நெஞ்சை வருத்தியது. ஆலோசிப்பதற்கும் நேரமில்லை. அவன் உயிருக்கு இறுதி நெருங்கிக் கொண்டிருந்தது. தீயின் வெம்மை அவனைப் பற்றத் தொடங்கியது. பதை பதைத்தான். 'எங்ஙனமேனும் தனக்கு இறுதி விளைவது உறுதி. ஆகையால் தப்பித்துக் கொள்வதற்கு வழி இருந்தால் முயலுவோம். இன்றேல் மடிவோம்,' என்று

RangaRakes tamilnavarasam.com

உறுதி கொண்டான். உடனே மின்னெனப் பாய்ந்தான். தீ அவனைச் சூழ்ந்துகொண்டது. எனினும் தீயால் சிறிது கருகி இருந்த சிறைக் கூடத்தின் காவற் கம்பிகளைத் தன் பலம்கொண்டு வலித்தான். அவைகள் அவன் தோள் வலிமை யின் எதிர் நிற்கமுடியாமல் முறிந்தன. அவன் சிங்கக்குட்டியைப்போல ஆவலோடு வெளியே தாவினன். சிறைக்கூடத்தைத் தீயிட்டுக் கொளுத்தி விட்டு அவ்விளைஞன் தப்பிச் செல்லாவாறு காவ லிருந்த வீரன்மீது அவன் எதிர்பாராத வகையில் திடீரெனப் பாய்ந்தான். அவ்வீரன் கையிலிருந்த வாளே நம் இளைஞனுக்கு ஆயுதமாயிற்று. ஒரே வீச்சால் காவலன் தலை மண்ணில் உருண்டது. இஃதறிந்த வீரர் பலர் அவனைச் சூழ்ந்து கொண்ட னர். அஞ்சா நெஞ்சம் படைத்த அவ்வாண்மகன் தான் ஒருவனே நின்று அத்துணைபேரையும் கொன்று குவித்தான். அங்கு நிற்காமல் சரே லெனப் பாய்ந்து ஒருவரும் தன்னை அறிந்து கொள்ளாதபடி தன் அம்மான் இரும்பிடர்த்தலை யாரை அடைந்தான்.

தம் அருமைத் தங்கை மைந்தனைக் கண்டார் இரும்பிடர்த்தலையார். அவனுடல் முழுதும் அன லின் வெம்மையால் வாட்டமுற்றிருந்தது. கால் மட்டும் நெருப்பினல் கருகியிருந்தது. உடனே பகைவர்கள் செய்த கீழ்மைத்தனம் அவருக்கு வெள்ளிடைமலையென விளங்கியது. அவர் நெஞ்சு குமுறினர். எனினும் தம் வீரன் உயிருடன் திரும்பியது அவருக்கு உவகை உண்டாக்கியது. இனி இளைஞன் இங்கிருப்பின் இன்னல்கள்

RangaRakes tamilnavarasam.com

தொடர்ந்து வருமென எண்ணினர் புலவர்; அவனை உடனே கரூருக்கு அனுப்பிவைத்தார். அவனும் மாறு வேடத்துடன் ஊரூராய் அலைந்து திரிந்தான்; சோழ வீரர்கள் எங்கெங்கும் தேடித் திரிவதை உணர்ந்தான். அவன் அவர்கள் கண்ணிற் படாமல் கரூரைச் சென்றடைந்தான். அங்கிருந்த தம் நண்பரொருவரை அவனை நன்கு காக்குமாறு செய்தார் இரும்பிடர்த்தலையார். வீரன் கரூரில் ஒருவரும் தன்னை அறிந்துகொள்ளாத வகையில் இனிதாக வாழ்ந்துவந்தான். தீயிடைப் புகுந்து வெளிவந்தபோது அவன் கால் கருகிவிட்டதால் மக்கள் அவனைக் கரிகாலன் என்றே அழைத்தனர். நாளடைவில் அவனுக்கு அப்பெயரே விளங்குவதாயிற்று.

கரிகாலன் செயல் இங்ஙனம் இருப்ப, உறையூரில் அவன் பகைவர்களிடையே கலகம் ஏற்பட்டது. அரச உரிமை கொள்வதில் அவர்களிடை அழுக்காறு மிகுந்தது. அவர்களுடைய ஆளுகையினால் துன்பமடைந்த குடிமக்களுள் முதியோர் சிலர் அக்கால வழக்கப்படி புதிய அரசனைத் தேர்ந்தெடுத்து அவன் கையில் நாட்டை ஒப்புவிக்க எண்ணினர்; அங்ஙனமே 'சீர்காழி' என்ற ஊரில் கட்டப்பட்டிருந்த அரச யானையை அவிழ்த்து விட்டனர். அந்த யானை துதிக்கையில் மாலையுடன் புறப்பட்டது; சோழ நாட்டைக் கடந்து சேர நாட்டுக் கரூரை அடைந்தது; அங்கு வேற்றுருவுடன் திரியும் கரிகாலனைக் கண்டு அவன் கழுத்தில் மாலையையிட்டது; அவனை அன்போடு தூக்கித் தன் முதுகிலேற்றி விரைந்து வந்தது. கண்டனர் பொறாமைப் பேயர்; மனம் துடித்தனர்; எவ்



RangaRakes tamilnavarasam.com

வளவோ இன்ன விழைத்தும் இன்னுயிரிழக்காது தன்னுரிமை பெற்ற வீரனின் முன் நிற்கக் கூசினர்; நாட்டு மக்கள் யாவரும் கரிகாலனிடம் காட்டும் பேரன்பை உணர்ந்தனர்; மனம் புழுங்கினர். மனம் புழுங்குவதைத் தவிர அவர் வேறுயாது செய்வர்? கரிகாலன் நல்லதோர் நாளில் முடி கவிக்கப் பெற்றுத் தனக்கே உரிமையான அரசை ஏற்றுக்கொண்டான். தன் தங்கை மகன் அரசு பெற்றது கண்டு இரும்பிடர்த்தலையார் கொண்ட மகிழ்ச்சி சொல்லுந்தரத்ததோ? கீழ்மைக்குணம் படைத்த பகைவர்கள்மட்டும் மேலும் அவனுக்குத் தீங்கு செய்வதிலேயே கருத்தாக இருந்தார்கள். கரிகாலனும் பழிக்குப் பழிவாங்கத் தக்க சமயத்தை எதிர்நோக்கி இருந்தான்.

சோழன் கரிகாலன் நாட்டை நல்ல முறையில் ஆண்டுவந்தான். அன்பு, அருள் முதலிய உயர் குணங்கள் எல்லாம் அவனிடம் பொலிந்தன. அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கம் என்ற நான்கு நற்குணங்களும் அவனிடம் நிரம்பி இருந்தன. அவன் மறச்செயல் கடிந்து அறச்செயல் செய்து வாழ்ந்து வந்தான். அவன் குடிமக்கள் கூறும் குறைமுறைகளைத் தானே கேட்டு அவர்கட்கு நீதி வழங்கினான்; காட்சிக்கு எளியனாகவும், கடுஞ்சொல் அற்றவனாகவும் விளங்கினான்.

> வேலன்று வென்றி தருவது மன்னவன்
> கோலதூஉம் கோடா தெனின்'

என்ற பொய்யா மொழியாரின் பொருண்மொழிப்படி அவன் தன் நாட்டை அன்பு வழியில் செங்கோல்கோடாமல் புரந்து வந்தான்.

RangaRakes tamilnavarasam.com

இங்ஙிலையில் கரிகாலனின் நுண்ணறிவை விளக்கும் செயல் ஒன்று நிகழ்ந்தது. சோழநாட்டுச் சிற்றூரில் அறிஞர் இருவர் ஒருங்கிருந்து கலைகளைப் பற்றி வாதிட்டனர். அவர் இருவரும் தம்முள் மாறான கருத்தைக் கொண்டனர். ஒருவர் மற்றொருவருக்கு எவ்வளவு விளக்கியும் மற்றொருவர் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. முடிவில் அவர்கள் தங்கள் ஐயத்தைப் போக்கி முறைசெய்ய வல்லவன் அரசனேயாவான் என்று எண்ணித் தம் வழக்கை உரைப்பதற்காக உறையூரை உற்றார்கள். அறிஞர் இருவரும் அரசவை அடைந்தனர். அரியணையில் ஆண்டில் இளைய இளைஞன் ஒருவன் வீற்றிருப்பது கண்டு திடுக்கிட்டுத் திகைத்தனர். "என்னே நம் மதியுடைமை! இவ்விளைஞனிடமா நம் வழக்கை உரைப்பது! கல்வியறிவும் உலகியலறிவும் ஒருங்கே வாய்ந்த நம்மாலேயே தீர்த்துக் கொள்ள முடியாத இவ்வழக்கை இவன் எங்ஙனம் தீர்ப்பான்? இவன் பால் மணம் மாறாத இளைஞனாக அன்றோ இருக்கின்றான். எவ்வாறு வழக்கின் முடிவை உணர்வான்?" என்று எண்ணி வந்த வழியே திரும்பினர். இவர்களுடைய எண்ணத்தை அவர்கள் முகத்தைக்கொண்டே தெரிந்துகொண்டான் கரிகாலன். அகத்தின் அழகு முகத்தில் தெரியுமன்றோ? உடனே அவர்களைப் பணியாளர் மூலம் வரவழைத்தனன். அவர்களை நோக்கி "பெரியோர்களே! உங்கள் எண்ணத்தை உணர்ந்தேன். உங்கள் எண்ணப்படியே உங்கள் வழக்கைத் தீர்த்தற்குரிய அறிவும் அநுபவமும் வாய்ந்த முதியவர் ஒருவரை அனுப்பி வைக்கின்றேன்.

RangaRakes tamilnavarasam.com

சிறிது அமருங்கள்,'' என்று கூறி எழுந்து சென்றான். தங்கள் மனத்தில் உள்ள எண்ணத்தை முகத்தால் உணர்ந்து கூறிய கரிகாலன் செயலைக் கண்டு அம் முதியவர்கள் திகைத்து நின்றார்கள்.

சிறிது நேரத்திற்கெல்லாம் அரசவையில் ஒரு முதியவர் தோன்றினர். அவர் தலையும் தாடியும் தும்பைப் பூவைப்போல் நரைத்திருந்தன. கண்கள் அறிவொளி வீசின. அவருடைய முகம் கலைகளையெல்லாம் கற்றுணர்ந்த பெருமிதத் தோற்றத்தோடும் அமைதியோடும் விளங்கியது. அம் முதியவர் வழக்குரைக்க வந்த அறிஞர் இருவரையும் நோக்கி, "உங்கள் வழக்கு யாது கூறுமின். என்னல் இயன்றவரையில் தீர்த்துவைக்க முயல்கின்றேன்," என்று கம்பீரமாக மொழிந்தார். முதியவர் இருவரும் நடுவு நிலைமையாளராக வந்த அந்த முதியவரைக் கண்டு மனம் மிக மகிழ்ந்தனர். "இவரன்றோ நம் வழக்கைத் தீர்த்தற்கு ஏற்றவர்? இவருடைய பேரறிவும், பெருந்தன்மையும் இவர் முகத்திலிருந்தே நன்கு தெரிகின்றனவே? இவருடைய முதுமையைப் பார்க்கும்பொழுதே இவர் எவ்வளவு உலகியலறிவு வாய்ந்தவர் என்பது உள்ளங்கை நெல்லியென விளங்குகின்றதன்றோ,'' என்று மனம் மிகவும் திருப்தி உற்றனர். பின்னர் அவர்கள் தங்கள் வழக்கை விவரமாக அம் முதியவர்க்கு எடுத்துரைத்தார்கள். அம்முதியவரும் அவர்கள் கூறிய வழக்கை நன்றாகக் கேட்டுத் தெளிந்தனர். பின்னர் அச்சிறந்த முதியவர் மிகவும் பழக்கப்பட்ட நீதிபதியைப் போல் அவர்கள் கூறிய சொற்களைக் கொண்டே அவ்வழக்கின்

RangaRakes tamilnavarasam.com



கரிகாலன் நரை முடித்து முறை செய்தல்

RangaRakes
tamilnavarasam.com

முடிவை நடுவுநிலைமையோடு எடுத்துக் கூறினர். அவர் கூறிய முடிவைக்கேட்டு வழக்குக்கொணர்ந்த முதியவர் இருவருடைய முகங்களும் மலர்ந்தன. அம் முடிவு அவ்விருவருக்கும் திருப்தியை விளைவித்தது. ஆதலால் அவர்கள் "நூலறிவும் உலகியலறிவும் ஒருங்கே வாய்ந்த பெரியீர்! வணக்கம். தங்கள் அறிவை என்னென்று கூறி வியப்போம். தாங்கள் கூறிய முடிவு எங்களுக்கு மிக்க மகிழ்ச்சியை விளைவித்தது. நாங்கள் உண்மையுணர்ந்தோம். நீங்கள் நீடு வாழ்வீர்களாக. உங்களை அனுப்பி எம் வழக்கைத் தீர்த்துவைத்த அரசிளங்குமரனும் நீடுவாழ்க," என்று கூறி யாழ்த்தினார்கள்.

வழக்கைத் தீர்த்துவைத்த முதியவர் "அறிஞர்களே! உங்கள் பிணக்குத் தீர்த்தமை குறித்து மகிழ்கின்றேன்," என்று கூறிக்கொண்டே தன் தலையில் கையை வைத்தார். என்னே வியப்பு! அரியணையில் இளமன்னனாகிய கரிகாலன் அமர்ந்திருந்தான். நரை முடியும் தாடியும் அவன் கையில் இருந்தன. கரிகாலனைக் கண்ட அம் முதியவர்கள் இருவரும், அவையினரும் திகைத்துச் செயலற்று நின்றனர்; தாங்கள் காண்பது கனவோ என்று ஐயுற்றனர். அவர்கள் தெளிவடைதற்குச் சிறிது நேரம் சென்றது. கரிகாலன் கையில் உள்ள நரை முடியைக் கண்டதும் அவர்கட்கு உண்மை விளங்கிவிட்டது. ஆ! என்று வியந்து நின்றனர். "என்னே இவ் வேந்தனின் நுண்ணறிவு! நாம் யாரை அறிவு நலம் நிரம்பாத சிறுவன் என்று கருதினேமோ அவனே நரை முடித்துவந்து நம் வழக்கைத் தீர்த்து வைத்தானே.

RangaRakes tamilnavarasam.com

அவ்விளைஞனென்று சிறிதும் தெரிந்துகொள்ள முடியவில்லையே! நம் மதியுடைமை இருந்தவாறு என்னே! மீன் குட்டிக்கு நீச்சல் கற்றுக் கொடுப்பவர் யார்? அதுபோல் குலவித்தை கல்லாமலேயே ஒவ்வொருவருக்கும் நன்கு அமையும் என்ற உண்மையை மறந்தோமே! நாமே அறிவுடையோம் என்ற அகந்தையாலன்றோ அரசனை இகழ்ந்தோம். இப்பொழுது என்ன செய்வது? அரசன் தன் நுண்ணறிவால் நம் அகந்தையை அடக்கினனே," என்று அவமானத்தால் மனம் குன்றினர்.

பின்னர் அவர்கள் மன்னவனை வணங்கி, "அரசர் ஏறே! நாங்கள் அறியாமையால் செய்த குற்றத்தை மன்னித்தருளல் வேண்டும். நாங்கள் அகந்தையால் கெட்டோம். தங்கள் பெருமையை உணராது தவறிழைத்தோம். எங்களுக்குத் தாங்கள் அறிவு கற்பித்தீர்கள். பேரறிவு படைத்த தாங்கள் காவிரி மணலினும் பலவாக வாழிய," என்று கூறி வாழ்த்தினர். கரிகாலனும் அவர்களுக்குத் தேறுதல் கூறிப் பல பரிசுகளும் வழங்கி அனுப்பினன். அரசனுடைய அறிவின் திறத்தைக் கண்டு அவையினர் வியப்பும் மகிழ்ச்சியும் அடைந்தனர். அதுமுதல் அவனிடம் அவர்கட்கு முன்னிலும் பன்மடங்கு மதிப்பும் பக்தியும் மிகுந்தன. அரசனுடைய இப்புகழ் சோழநாடு முழுதும் பரவியது. சோணாட்டு மக்கள் கரிகாலனைத் தெய்வமாகவே கருதிப் போற்றிவந்தனர்.

பின்னர், கரிகாலன் தன் தந்தை அழுந்தூர் வேளிரிடை பெண் கொண்டதுபோலத் தானும் நாங்கூரில் சிறப்புடன் வாழ்ந்த வேளாளர் ஒருவர்

RangaRakes tamilnavarasam.com

மகளை மணந்துகொண்டு இல்லறத்தை இனிது நடத்தினன். அவர்களுக்கு நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி, மாவளத்தான் என்ற புதல்வர்கள் மூவரும் ஆதிமந்தி என்ற நல்லிசைப் புலமைவாய்ந்த மகள் ஒருத்தியும் பிறந்தனர். கரிகாலன் சீரும் சிறப்பும் பெற்று ஆண்டு வந்தபோது சோழ நாடு வளங்கொழிக்கும் தெய்வ நாடாகவே விளங்கியது. சோழ நாடு முழுவதும் தமிழ் மணம் கமழ்ந்தது. புலவர்கள் பெருகினர். கவலையற்ற வாழ்க்கை கலைகள் பல தோன்றக் காரணமாயிற்று. ஆடலும், பாடலும், சிற்பமும், சித்திரமும் அவன் காலத்தில் சிறந்து விளங்கின. இவ்வளவு நலங்கள் யாவும் வாய்க்கப் பெற்றும் கரிகாலன் அமைதியுற்றானில்லை. ஒரு கவலை அவனை வருத்தியது. ஒரு நாடு நாகரிகத்தி லும், செல்வ நிலையிலும் முன்னேற்றமடைவதற்கு அந்நாட்டின் வாணிபமே முதற்காரண மாகும். எல்லா வளங்களும் நிறைந்த சோழ நாட்டை வாணி கத்திலும் சிறப்புடையதாக்க அவன் எண்ணினான். உறையூர் அதற்கேற்ற தலைநகரமாக அவனுக்குத் தோன்றவில்லை அதற்கு எல்லா வகையிலும் ஏற்ற இடமாய் விளங்கியது காவிரிநதி கடலொடு கலக்குமிடத்தில் இருந்த காவிரிப்பூம்பட்டினமே என்று முடிவு செய்தான். உடனே அதனைத் தன் தலை நகராகக் கொண்டான். காவிரிப்பூம் பட்டினத்தை மருவூர்ப்பாக்கம், பட்டினப்பாக்கம் என்ற இரு பெரும் பிரிவுகளாகப் பிரித்துச் சிறந்த வசதிகளுடைய பெரிய நகரமாக்கினான். அக்காலத்தில் வேறு எல்லாத் தலைநகரங்களிலும் காவிரிப்பூம்பட்டினமே சிறந்ததாகத் திகழ்ந்தது. அக்காலத்தில் உலகம்

RangaRakes tamilnavarasam.com

புகழும் பெரிய துறைமுகமும் அதுவே. இக்காலத்தில் நாகரிகச் சின்னமெனக் கருதப்படும் கலங்கரை விளக்கம் அக்காலத்திலேயே அத்துறைமுகத்தில் சிறந்து பொலிந்தது.


மேலும் கரிகாலன் சோழ நாட்டை வளங் குன்று நாடாக்க நினைத்துக் காவிரி நதியின் நீர் பயனில்லாமல் கடலில் கலப்பதைத் தடுத்துப் பயன்படச் செய்ய உறுதி கொண்டான்; எனவே காவிரியின் இருமருங்கிலும் பலமான கரையை அமைத்தான். இதனால் நிலவளம் பன்மடங்கு பெருகலாயிற்று. மக்கள் அவனைக் கரிகாற் பெருவளத்தான், பெருவளத்தான், திருமாவளவன் என்ற சிறப்புப் பெயர்களால் போற்றினர்.

கரிகாலன் இவைகளோடமையாமல் இமயம் முதல் குமரிவரை ஒரே பேரரசாகத் திகழவேண்டும் என்று விரும்பினான்; பெரும் படையுடன் சென்று தொண்டை நாட்டை வென்று தன்னடிப் படுத்தினான் ; பின்னர் வடக்கே சென்று அங்கிருந்த அரசர்கள் பலரையும் வென்று அடக்கினான். கரிகாலன் பேராண்மையைக் கண்ட அரசர் பலர் அடிவணங்கித் திறை கொடுத்தனர். அவனை எதிர்த்து வென்றவர்கள் ஒருவரும் இல்லை. இமயம் வரை அவனடிப்பட்டது. கரிகாலன் தான் பெற்ற பெரு வெற்றிக் கறிகுறியாக இமயத்தில் தன் புலிக்கொடியைப் பொறித்துத் திரும்பினான். தமிழ் நாட்டு மக்கள் கரிகாலன் கொண்ட வெற்றியால் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையுமுண்டோ ? தமிழ் மொழியின் பெருமை நாடெங்கும் பரவியது. அதுவே அரசியல் மொழியாக விளங்கியது. கரி

RangaRakes tamilnavarasam.com

காலன் உலகம் போற்றும் ஒப்பற்ற பேரரசனாக விளங்கி நாட்டை இனிது ஆண்டு வந்தனன். அவனே சோழ அரசர்களில் மிகச் சிறந்தவன் என்று போற்றப் படுகிறான்.

இளைஞர்களே! கரிகாலன் வாழ்க்கை வரலாறு சிறந்த பல உண்மைகளை நன்கு உணர்த்துகின்றதல்லவா? நீங்களும் கரிகாலனைப்போல் துன்பம் வந்தபோது கலங்காத மன உறுதியையும், இடைவிடாப் பேருழைப்பையும், பகைவர்க் கஞ்சா மனப்பான்மையையும், எச்செயலையும் ஆய்ந்து செய்யும் இயல்பையும், நாட்டு முன்னேற்றத்தில் நாட்டத்தையும் கொண்டு தமிழ்ப் பெருமக்களாய்த் திகழ்வீர்களாக.



RangaRakes tamilnavarasam.com

## 7. ஒருவர் பொறை இருவர் நட்பு

'சான்றோர் உடைத்து தொண்டை நன்னாடு,' என்று ஔவையாரால் புகழ்ந்து கூறப்பெற்ற தொண்டை நாட்டின் தலை நகராகத் திகழ்ந்த காஞ்சியம் பதிக் கருகில் தாமல் என்று சிற்றூர் ஒன்று உள்ளது. அச்சிற்றூர் நீர் வளத்தாலும் நில வளத்தாலும் சிறந்து மக்கள் இன்பமாய் வாழ்வதற்கு ஏற்றதாய்த் திகழ்கிறது.

அச்சிற்றூரில், ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர், சிறந்த அந்தணர் குலத்தில் **தாமப்பல் கண்ணனார்** என்ற புலவர் பெருந்தகையார் தோன்றினர். இவர் இளமையிலேயே கூரிய அறிவுடையவராய் விளங்கினார். இவருடைய மதிநுட்பத்தைக் கண்ட ஊர் மக்கள் இவரிடம் மிகுந்த அன்புகாட்டி வந்தார்கள். அவ்வூரிலிருந்த இளஞ் சிறுவர்களுக்கெல்லாம இவர் ஓர் எடுத்துக்காட்டாய் விளங்கினார். தம் பிள்ளைகளுக்கு அறிவுரை கூறும்போது தாய் தந்தையர்கள், "நீங்கள் தாமப்பல் கண்ணனைப்போல் இருக்கவேண்டும்," என்று கூறுவார்கள் என்றால் இவர் எவ்வளவு தூரம் அவர்களுடைய மனத்தைக் கவர்ந்திருந்தனர் என்பது நன்கு விளங்குமன்றோ ?

இவ்வாறு எல்லோர் மனத்தையும் கவர்ந்த அறிவுடைச் செல்வராகிய தாமப்பல் கண்ணனார் உரிய பருவத்தில் கல்வி கற்கத் தொடங்கினார். கலைகள் பலவும் இவரைத் தேடி அடைந்தனவோ என்று கூறுமாறு மிக விரைவில் எல்லாக் கலைகளையும்

RangaRakes tamilnavarasam.com

இவர் எளிதில் கற்றுக்கொண்டார்; தேனினும் இனிய நம் செந்தமிழ் மொழியை அக்காலத்தில் சிறந்து விளங்கிய தமிழ்ப் புலவர் ஒருவரை யடுத்து ஐயந்திரிபறக் கற்றுக்கொண்டார். கற்றுக்கொண்டதோ டமையாது, அமிழ்தினு மினிய செந்தமிழ்ச் செய்யுட்களைப் பாடுவதிலும் புலமை பெற்றுச் சிறந்த புலவராய் விளங்கினர்.

இங்ஙனம் கல்வியும், கவிபாடும் வன்மையும் ஒருங்கடைந்த புலவர் பெருந்தகையார் கல்விச் செருக்கற்றவராய் வாழ்ந்து வந்தார்; எல்லாரோடும் இனிய முகத்துடன் பழகி இன்சொற் கூறும் இயல்பினராய் இருந்தார்; பிறரிடம் தவறு காணின் தைரியத்துடன் அவர்கள் தவற்றினை எடுத்துக்காட்டி இடித்துக் கூறுவர்; மிகுந்த செல்வமுடையவரென்றும் அஞ்சமாட்டார்; செல்வர்களுடனும் சரி சமமாகப் பழகும் இயல்புடையவராய் இருந்தார்.

இத்தகைய அருங்குணங்கள் பலவும் ஒருங்கமையப் பெற்ற தாமப்பல் கண்ணனர் அக்காலத்தில் சிறந்து விளங்கிய அரசர்களையும், குறுநில மன்னர்களையும், வள்ளல்களையும் புகழ்ந்து பாடி அவர்களால் பெரிதும் போற்றப்பட்டார்; அவர்கள் அன்புடன் அளித்த பொன்னும், துகிலும் ஆகிய பலவிதமான பரிசில்களைப் பெற்று வறுமை யறியாதவராய்ப் பெருஞ் சிறப்புடன் வாழ்ந்து வந்தார்.

இங்ஙனம் இருக்கும் நாளில், வான் பொய்ப்பினும் தான் பொய்யாமல் வளம் சுரந்து சோழ நாட்டைச் சோறுடைய நாடாக்கிய காவிரி யாறு கடலோடு கலக்கும் இடத்தில் அமைந்த **காவிரிப்பூம்**

பட்டினத்தில் சோழன் நலங்கிள்ளி என்ற அரசன் ஆண்டு வந்தான். அவன் அருங்குணங்கள் பலவும் அமைந்தவன்; கவி பாடும் ஆற்றலும் ஒப்பற்ற வீரமும் படைத்தவன். புலவர் பாடும் புகழுடையோனாய் அவன் வாழ்கின்றான் என்று கேள்வியுற்றார் கண்ணனார். அவ்வரசனுடைய நற்குணங்கள் புலவர் பெருந்தகையாரின் மனதைக் கவர்ந்தன. எங்ஙனமேனும் அவ்வரசனைக் காணவேண்டும் என்ற அவா அவரைத் தூண்டியது. அதனால் அவர் சோழ நாட்டை நாடிப் புறப்பட்டார்.

நலங்கிள்ளியின் மேல் வைத்த பேரவாவால் கடத்தற் கரிய கடு வழியைக் கடிதிற் கடந்து சென்று காவிரிப்பூம்பட்டினத்தைக் கண்ணனார் கண்டார். அவர் கொண்ட களிப்பிற்கோர் எல்லையில்லை. ஆவினைக் கண்ட கன்றெனை அரசனைக் காண அரண்மனையின் வாயிலைக் குறுகி, அரசனைக் காணவேண்டும் என்ற விருப்பத்தினைப் புலவர் காவலர்க்கு உணர்த்தினார். அரசன் அரண்மனையில் புலவர்களுக்கு என்றும் உட்செல்லத் தடையில்லாமையால் காவலர் இவரைப் பணிவாக உள்ளே அழைத்துச் சென்றனர். புலவர் நலங்கிள்ளியைக் கண்டு மகிழ்ச்சியால் மயிர் சிலிர்ப்ப நின்றார். நலங்கிள்ளியும் இவரைத் தன்னருகில் இருத்தி அன்புடன் இன்மொழி கூறி, இவர் வரலாறு கேட்டு உபசரித்தான்; இவர் தன்மேல் கொண்டிருந்த பெரு விருப்பைக் கேட்டு உளம் பூரித்தான். அவருடைய பெருந்தன்மையான தோற்றம் அவன் மனத்தைக் கவர்ந்தது. அதனால் சோழ வேந்தன் புலவரை எப்பொழுதும் அரண்

RangaRakes tamilnavarasam.com

மனையிலேயே வசித்துத் தனக்கும் தன் தம்பி மாவளத்தானுக்கும் உற்ற நட்பினராய் இனிதிருக்க வேண்டுமென்று வேண்டிக்கொண்டான். அன்புக் கட்டளையை மீற யார்க்கும் இயலாதன்றோ ! ஆதலின் புலவர் அரசன் வேண்டுகோளுக் கிணங்கினர்.

நலங்கிள்ளியைக் காட்டிலும் மாவளத்தான் புலவரிடம் மிகுந்த அன்புடையவனாக இருந்தான். எப்பொழுதும் அவன் புலவருடனே இருப்பான். அவன் தாமப்பல் கண்ணனருடன் பொழுது போக்கிற்காக அரண்மனைச் சோலையில் சென்று, பல பொருள்களைக் குறித்து வாதிட்டும், பற்பல விளையாட்டுக்கள் விளையாடியும், அங்குள்ள அருவியில் மூழ்கித் திளைத்தும், அளவளாவியும் மகிழ்வான். அவரைப் பிரிந்துறையும் கணப் பொழுதும் அவனுக்கு ஒரு யுகமாகத் தோன்றும். இவ்வாறு உணர்ச்சியால் ஒன்றுபட்ட உத்தம நண்பர்களாய்த் திகழ்ந்தார்கள் மாவளத்தானும், புலவர் தாமப்பல் கண்ணனரும்.

ஒரு நாள் மாவளத்தான் புலவரைப் பொழுது போக்கிற்காகச் சொக்கட்டான் ஆட அழைத்தான். சொக்கட்டான் ஆடுவதில் புலவர் மிகச் சமர்த்தர்; அவ்விளையாட்டில், பொழுது போவதே தெரியாமல் ஈடுபட்டு உற்சாகமாய் விளையாடுவார். 'சொக்கட்டான்,' என்று கூறியவுடன் புலவர் விருப்புடன் விளையாடுவதற்கு இணங்கினர்.

உடனே பணியாளர் சொக்கட்டான் ஆடுவதற்குரிய கருவிகளைக் கொண்டு வந்து வைத்தனர்; உயர்ந்த பட்டில் கட்டங்களமைத்து, விலையுயர்ந்த

RangaRakes tamilnavarasam.com

பொற் சரிகையால் விளிம்பு கட்டிய துணியை இடையே பரப்பினர். சிறந்த யானைத் தந்தங்களால் செய்யப்பட்டு, மணிகள் பதிக்கப் பெற்ற காய்களை முறைப்படி வைத்தனர்; பொன்னால் செய்யப்பட்டு ஒளியுடன் திகழும் சொக்கட்டான் ஆடும் கருவியை எதிரே வைத்தனர். மாவளத்தான் இலவம்பஞ்சு உள்ளிட்டுத் தைக்கப்பட்ட சிறந்த பட்டாலாகிய திண்டில் சாய்ந்துகொண்டான். எதிரே புலவர் அமர்வதற்கும் அவ்வாறே ஆசனம் அமைக்கப்பட்டிருந்தது. புலவர் அமர்ந்து ஆட்டத்தைத் தொடங்கினர்.

இருவரும் உற்சாகமாய் விளையாடிக் கொண்டிருந்தனர். அன்று என்னவோ புலவர் கை ஓங்கவே இல்லை. அவர் எவ்வளவு திறமையுடன் விளையாடியும் மாவளத்தானே தகுந்த பந்தயத் தொகைகளைப் போட்டு வந்தான். அதனால் புலவர் மனம் வருந்தியது. சொக்கட்டான் ஆடுவதில் சிறந்தவர் என்று பெயர்பெற்ற அப்புலவர், தம்மிடம் அவ்வாட்டத்தைப் பழகிக்கொண்ட அரசகுமாரனிடத்தில் தோல்வியடைய நேரிடும் தறுவாயில் மனம் வருந்தாமலிருப்பாரா? அம்மன வருத்தம் பொறாமையாக மாறியது. தவறு செய்தேனும் தாமே வெற்றியடைய வேண்டும் என்று அவர் மனத்துட்கொண்டார்; அதற்குத் தக்க சமயத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். அறிவுடையவர்களானாலும் என்ன! சூதாட்டத்தில் ஈடுபட்டால் மதியிழப்பரென்பது மெய்யன்றோ! சூதாட்டத்தில் ஈடுபட்ட காரணத்தினால் மதியிழந்து பேரரசர்களாகிய நளனும், தருமபுத்திரரும் தங்கள் நாட்டையும்

RangaRakes tamilnavarasam.com

நலங்களையும் இழந்து காடே கதியாகத் திரிந்தன ரன்றோ !

தம்முடைய வெற்றியிலேயே கருத்தாகத் தாமப் பல் கண்ணனார் மாவளத்தான் கவனிக்காத சமயம் பார்த்துத் தமக்கு வெற்றியுண்டாக்கும் வகையில் காய்களைத் திருப்பிவைக்க முயன்றார். திடீரென்று அந்நிகழ்ச்சியைக் கவனித்தான் மாவளத்தான். புலவரின் கீழ்மைத்தனம் மாவளத்தான் மனத்தில் சினத்தீயை மூட்டிவிட்டது. உள்ளத்தைக் கவர்ந்து ஓங்கிய சினத்தினால் அவன் தன்னை மறந் தான். தன்னெதிர் அமர்ந்திருப்பவர் சிறந்த தமிழ்ப் புலவர், மேலும் தன் ஆருயிர் நண்பர் என்ப தனையும் மறந்தான். சினத்தால் கண்கள் சிவந்த மாவளத்தான் தன் கையிலிருந்த சூதாடு கருவி யைத் தாமப்பல் கண்ணனாரின் முகத்தை நோக்கி வீசி எறிந்தான். அவன் எறிந்த வேகத்தில் அக் கருவி புலவர் நெற்றியில் பலமாகத் தாக்கி இரத்தம் ஒழுகச் செய்தது.


எதிர்பாராத விதமாக நேர்ந்த இவ்வதிர்ச்சி யால் தாமப்பல் கண்ணனாரும் பெருஞ் சினங் கொண்டார்; சினத்தால் அறிவிழந்தார்; எதிரே இருப்பவன் அரசிளங் குமரன் என்பதனையும் மறந்தார். அரசன் பகை தன்னுயிர்க்கே இறு தியை விளைக்கும் என்ற எண்ணம் அவர் மனத்தில் எழவில்லை. சினத்தால் உந்தப்பட்ட தாமப்பல் கண்ணனார், "ஏ மாவளவ! ஆத்திமாலையைச் சூடிய சோழர் குலத்தில் தோன்றிய நின் முன்னவர்கள் யாவரும் அந்தணர்கள் வருந்தத்தக்க செயல்களைச் செய்யமாட்டார்கள். நீ என்னைச் சூதாடு கருவியால்

RangaRakes tamilnavarasam.com

தாக்கி என் நெற்றியில் இரத்தம் ஒழுகச் செய்தனை. இச் செயல் நினக்குத் தகுதியானதா? நீ செய்த இச் செயலால் நான் உன் பிறவியில் ஐயப்படுகின்றேன். சிறந்த சோழ அரசனுக்கு மகனாகப் பிறந்திருந்தால் நீ இச் செயல் செய்திருக்கமாட்டாய்,'' என்று மனவெறுப்புடன் படபடவென்று பேசினார்.

தாமப்பல் கண்ணனார் நெற்றியில் ஒழுகிய இரத்தத்தைக் கண்டவுடன் மாவளத்தான் மனந் தளர்ந்தான். அவன் சீற்றம் சிதைந்தது. சினத்தால் சிந்தை திரிந்த தமிழ்ப் புலவருக்கு—தன் ஆருயிர் நண்பருக்கு—தான் செய்த பெருந் தீங்கை எண்ணி எண்ணி மனம் புழுங்கினான்; அவர் முகத்தைப் பார்க்கவும் நாணி மனம் கூசினான்; முகத்தைத் தொங்கவிட்டுக் கொண்டு மனம் வருந்தினான். அப்பொழுது புலவர் வெகுண்டு கூறிய உரைகள் வெந்த புண்ணில் வேல் நுழைந்தாற்போல அவன் உள்ளத்தை வாட்டின. தான் செய்த பிழையால் தனக்கு நேர்ந்த பழியை உன்னி அவன் பெருமூச் செறிந்தான்; புலவரை வருத்திய இக் குற்றம் தன்னேடொழியாது தன் குலத்திற்கே யன்றோ பெரும் பழியை விளைக்கும் என்று மனங் கலங்கினான். அவர் மனம் தன் செய்கையால் எவ்வளவு புண்பட்டு இருந்தால் சொல்லத்தகாத இவ்வுரையைத் தான் அரசிளங்குமரனென்றும், இதனால் தமக்குப் பெருந் தீங்கு விளையுமென்றும் கருதாமல் கூறியிருப்பார் என்று எண்ணினான். தான் செய்தது பெரும் பிழையென்று மனத்துக் கொண்டு எங்ஙனமேனும் புலவரிடம் தன் பிழையைக் கூறி மன்னிப்புப்

RangaRakes tamilnavarasam.com



தாமப்பல் கண்ணனார் மாவளத்தானிடம் சினந்து கூறல்

RangaRakes tamilnavarasam.com

பெறல் வேண்டும் என்று அவன் மனம் அவனைத் தூண்டியது.

உடனே மாவளத்தான் குனிந்த தலை நிமிராமல், "புலவர் ஏறே! அறியாமல் யான் செய்த பெரும்பிழையைப் பெரிதும் மன்னித்தல் வேண்டும். நான் அரசிளங்குமரன் என்ற செருக்கு என் கண்ணை மறைத்தது. அதனால் ஆருயிர் நண்பராய உமக்கு இத்தீங்கு செய்தேன். சிறியோர் செய்த குற்றத்தைப் பெரியோர் பொறுத்தல் கடனன்றோ?" என்று பணிமொழி கூறி வேண்டினான். அவன் கண்களினின்று இரண்டு துளி கண்ணீர் கீழே உதிர்ந்தது.

இக் காட்சியைக்கண்ட தாமப்பல் கண்ணனார் பெரு வியப்படைந்தார். சினங் கொண்டு தாம் கூறிய உரைகளைக்கேட்டு மாவளத்தான் தலை குனிந்திருந்ததைக் கண்டவுடன் அவர் சீற்றம் மாறியது. பேரறிவு பெற்றார். சினத்தால் தாம் செய்த தவற்றை உணர்ந்தார். "கூறத்தகாத உரைகளை அரசிளங்குமரனென்றும் கருதாமல் கூறிய இச் செய்தி மன்னவன் செவிப்படின் நம்முயிர்க்கிறுதி விளைவது உறுதியன்றோ? அந்தோ! எவ்வளவு அறிவு நூல்களைக் கற்றிருந்தும் பயன் என்ன? அரைக்கணத்தில் என் அறிவிழந்தேன். இந்நாள் வரையில் உண்டியும் உறையுளும் கொடுத்துத் தன் ஆருயிர் நண்பனாக என்னைப் போற்றிய அரச குலத்துக்கேயன்றோ பெரும் பழியை உண்டாக்கிவிட்டேன். ஆ! நன்றி கொன்ற பாதகனானேனே. 'உன் பிறவியில் ஐயப்படுகின்றேன்,' என்ற இவ்வுரை எவ்வளவு குற்றமும்



RangaRakes tamilnavarasam.com

கொடுமையும் நிறைந்தது? எங்ஙனமாவது மாவளத் தானிடம் இரந்து வேண்டி மன்னிக்கும்படி கேட்டுக் கொளல் வேண்டும்,'' என்று பலவாறு எண்ணி நடுங்கிக் கொண்டிருந்த புலவர் மாவளத்தான் கூறிய உரைகளைக் கேட்டு வியப்படையாமல் இருப் பாரா? அழிவைக் கூறவேண்டிய வாயிலிருந்து அன் புரைகளைக் கேட்ட தாமப்பல் கண்ணனார் அகங் கரைந்தார். அவர் மனம் வேதனைப்பட்டது. “ இத்தகைய பெருந்தன்மை பொருந்திய அரசகு மாரனையா நான் பழித்துரைத்தேன்! ‘பிறப்பின் கண் ஐயப்படுகின்றேன்,' என்று கூறிய என் நாவைத் துணியாமல் நயமுடன் இன்மொழி பேசி மன்னிப்பை நாடும் மன்னனையா நான் இகழ்ந் துரைத்தேன்!'' என்று அவர் மனம் துடித்தார். கண்களில் அருவிபோல் நீர் வழிந்தது. நாக்குழ றிற்று. உடம்பு நடுங்கியது. தாமப்பல் கண்ணனார் ஒருவாறு தம்மைத் திடப்படுத்திக் கொண்டு கூற லாயினர்.

“ஒரு சிறிய புறாவின் துன்பத்தைப் போக்கு வதற்காகத் தானே துலைத்தட்டில் ஏறி நின்று தன்னுயிரையும் கொடுக்கத் துணிந்த அருளும், வள்ளல் தன்மையும் உடைய சிபிசக்கரவர்த்தியின் வழித்தோன்றலே! ஒப்புயர்வற்ற வீரனாகிய நலங் கிள்ளியின் பின் பிறந்தோனே! வீரர் தலைவ! வள்ளால்! ‘ஆத்திமாலை யணிந்த சோழர் அந் தணர் மனம் வருந்தும் செயல் செய்யார். நீ வெறுக்கத்தக்க செயலினைச் செய்தாய். இஃது உனக்குத் தகுதியோ? நீ செய்த இச் செயலால் உன் பிறவியில் எனக்கு ஐயம் உண்டாகிறது,''

RangaRakes tamilnavarasam.com

என்று அறிவில்லாமல் நான் கூறியது பெருந் தவறு. அவ்வாறு தவறிழைத்தவன் நானாக இருக்கவும், தண்டிக்கக்கூடிய நிலையில் நீ இருந்தும், என்னை வெறுக்காமல் நீயே தவறு செய்தவன் போல் மிகவும் நாணமடைந்தாய். இவ்வாறு தமக்குத் தீங்கு செய்தவரைப் பொறுக்கும் தலை சிறந்த குணம் இச் சோழர்குலத்தில் பிறந்தவர்க்குத்தான் இயல்பாகக் காணப்படுகிறது. இதற்கு எவ்வளவு சகிப்புத்தன்மை வேண்டும்? இதனால் நின் குலப் பெருமையை நன்கு விளக்கிவிட்டாய். நானே தவறு செய்தவன். அரசனென்று கருதாமல் உன்னுடன் சரிசமமாகச் சூதாடத் தொடங்கியது முதல் தவறு. ஆட்டத்தில் வஞ்சனை புரிந்தது இரண்டாவது தவறு. தவறு செய்ததற்குரிய தண்டனை அளிக்கப்பட்டபோது வெகுண்டு தீச்சொல் கூறியது மன்னிக்கமுடியாத மூன்றும் தவறு. என்னை மன்னித்தல் வேண்டும். மிகுந்த நீர்ப் பெருக்கையுடைய காவிரியின் மணலினும் பலவாகப் பல்லாண்டு நீ வாழ்வாயாக,'' என்று வணங்கிக் கூறினர்.

தாமப்பல் கண்ணனர் கூறிய இவ்வுரைகளால் மனம் மகிழ்ந்த மாவளத்தான் புலவரை அன்புடன் தழுவிக்கொண்டான். இருவரும் முன்னர் நடந்த நிகழ்ச்சியை அப்பொழுதே மறந்து விட்டனர். சான்றோர் சினம் நீர்கிழிய எய்த வடுப்போல மாறுமன்றே! முன்போல மனம் ஒன்றுபட்ட மாவளத்தானும் தாமப்பல் கண்ணனரும் முன்னினும் பன்மடங்கு மனங்கலந்த நண்பராகப் பழகி இனிது வாழ்ந்து வந்தார்கள். இச்செய்தி கேட்டு நலங்

RangaRakes tamilnavarasam.com

கிள்ளி தன் தம்பியின் பெருந்தன்மையை எண்ணி மனம் மகிழ்ந்தான். குடிமக்களும் மாவளத்தானின் பெருந்தன்மையைப் போற்றிக் கொண்டாடியதுடன் தாமப்பல் கண்ணனாரின் நட்பின் பெருமையையும், அன்புடைமையையும் அறிவு நுட்பத்தையும் பலபடியாகப் பாராட்டினார்கள்.

மாணவர்களே! எத்துணைச் சிறந்த குணமுடையவரும் சில சமயங்களில் குற்றம் புரிய நேரலாம். யானைக்கும் அடிசறுக்குமன்றோ! அச்சமயங்களில் தாம் புரிந்த குற்றத்தை ஒப்புக் கொண்டு அதற்காக மன்னிப்புக் கேட்பதே சிறந்த குணமாகும். இத்தகைய அருங்குணம் உம்மிடம் மேன்மேலும் வளர்ந்து மாவளத்தான் போல் மாவளம் பெறுவீராக.

'மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாந்தம்
தகுதியான் வென்று விடல்' (திருக்குறள்)

RangaRakes tamilnavarasam.com

## 8. ஒற்றுமை வளர்த்த நற்றமிழ்ப் புலவர்

பண்டு சோழ நாட்டில் கோவூர் என்ற சிற்றூர் ஒன்று இருந்தது. அச்சிற்றூர் இயற்கை வளம் நிறைந்தது. பச்சைப் பட்டுப் போர்த்தது போல அச்சிற்றூரைச் சுற்றிலும் நெல் வயல்கள் பல செறிந்திருந்தன. அச்சிற்றூரில் உழைப் பொன்றே செல்வமெனக் கருதி வாழும் வேளாளர் வாழ்ந்திருந்தனர். அச்சிறந்த வேளாளர் குடியொன்றில் தோன்றிய கோவூர் கிழார் என்ற புலவர் பெருஞ்சிறப்புடன் அச்சிற்றூரில் வாழ்ந்திருந்தனர். கோவூர் என்பது ஊர்ப்பெயர்; கிழார் என்பது வேளாளரைக் குறிக்கும் மரபுப்பெயர். இவ்விரண்டு பெயர்களும் சேர்த்து இப்புலவர் பெருமான் கோவூர் கிழார் என்றே வழங்கப்பட்டார்.

கோவூர் கிழார் இளமையில் நல்லாசிரியர் ஒருவரை அடுத்து முறையாகக் கல்வி கற்றார். ஆசிரியர் குறிப்பறிந்து, அவர், 'இரு,' எனச் சொல்ல இருந்து, சித்திரப் பாவைபோல அடங்கி, கருத்தைப் பிறவற்றில் செலுத்தாமல் பயின்றார். இடை இடையே ஏற்படும் ஐயங்களைப் பணிவோடு ஆசிரியரை அடுத்துக் கேட்டுத் தெரிந்து, நற் புலமை எய்தினார். கல்விக் கேற்ற ஒழுக்கமும் அவர்பால் அமைந்திருந்தது. அன்பு, அருள், ஈகை என்ற நற்பண்புகள் இளமையிலிருந்தே அவரிடம் காணப் பட்டன. அவர் பிறர் துன்பங் கண்டு சகியாமல் விரைந்து சென்று அதனை நீக்க முயல்வார்.

RangaRakes tamilnavarasam.com

'தங்குறை தீர்வுள்ளார் தளர்ந்து பிறர்க்குறூஉம்
வெங்குறை தீர்க்கிற்பார் விழுமியோர்'

என்ற செய்யுளுக்கு ஏற்ற எடுத்துக்காட்டாய் விளங்கினர் அப்புலவர் பெருந்தகை. அவர் பிறர் செய்த குற்றத்தை நடுவு நிலைமையோடு எடுத்துக் கூறி அறிவுரை வழங்குவார்; அரசனே தவறு செய்தாலும் அஞ்சமாட்டார். இச்சிறப்புக்கள் அமைந்த அப்புலவர் மணியைச் சோழ நாட்டு மக்கள் பெரிதும் பாராட்டிப் போற்றிவந்தனர்.

கோவூர் கிழார் வாழ்ந்த நாளில் சோழ நாட்டை நலங்கிள்ளி என்ற அரசன் காவிரிப்பூம் பட்டினத்தைத் தலை நகராகக் கொண்டு ஆண்டு வந்தான். அவன் கல்வி கேள்விகளில் சிறந்து, கவி பாடும் ஆற்றல் அமைந்தவன்; புலவர்களை ஆதரித்த புண்ணியன்; சேர பாண்டியரை வென்று அவர்தம் நாடுகளைப் புலவர்க்குப் பரிசிலாக வழங்கக்கூடிய பெரும் வல்லமை பெற்றவன். குடிமக்களைத் தாய்போல் புரக்கும் அருள் வாய்ந்தவன். அவன் ஆட்சியில் சோழநாடு மிகவும் செழித்திருந்தது. நாட்டில் அன்பும் அறனும் வளர்ந்தன. அதனல் பண்பும் பயனும் பெருகின.

சோழநாடு முழுதும் பரவி இருந்த கோவூர் கிழாரின் பெருமை மன்னவன் செவிப் படாமல் இருக்குமோ? அவரை வரவழைத்து அவரோடு பழகி மகிழ வேண்டும் என்று ஆவல் கொண்டான் அரசன். ஆதலால் தக்கார் மூலமாகக் கோவூர் கிழாரைத் தலைநகருக்கு வரவழைத்தான். புலவர் தன் அவையை அடைந்ததும் நலங்கிள்ளி எதிர்

RangaRakes tamilnavarasam.com

சென்று வரவேற்று இன்மொழிகள் பல கூறி மகிழ்வித்தான். புலவர் அரசனின் அன்பைக் கண்டு மனமுருகி வாழ்த்தினர். பின்னர் நலங் கிள்ளியும் கோவூர் கிழாரும் பல பொருள்களைப் பற்றி உரையாடி மகிழ்ந்தனர். கோவூர் கிழாரின் நுண்ணறிவு அவ்வுரையாடல் வாயிலாய் அரச னுக்கு நன்கு விளங்கியது. அத்தகைய புலவர் தன் அவைப் புலவராக அணிசெய்தால் தன் ஆட்சி மேலும் சிறப்படையும் என்று காவலன் கருதினன்; தன் எண்ணத்தைப் புலவர்க்கு உணர்த் தினன். கோவூர் கிழாரும் அரசனின் அன்பைப் புறக்கணிக்க இயலாமல் அதற்கு இசைந்தனர். அரசன் அன்றே கோவூர் கிழார் தன் அவைப் புலவரெனப் பல்லோரும் அறிய எடுத்துரைத்துப் பெரும் சிறப்புக்கள் பல செய்வித்து மகிழ்வித் தான். அதுமுதல் கோவூர் கிழார் கோவூரிலும், புகாரிலுமாக வாழத் தொடங்கினர்.

சோழ நாட்டின் மற்றொரு பகுதியில் நலங் கிள்ளியின் தாயத்தானகிய நெடுங்கிள்ளி என்னும் அரசன் ஆண்டுவந்தான். இருவருக்கும் நீங்காத பகை இருந்துவந்தது. ஒரு சமயம் நெடுங்கிள்ளி, நலங்கிள்ளியின் நாட்டைக் கைப்பற்றக் கருதினன்; அதற்காகப் பெரும்படையும் திரட்டலாயினன். மாற்றான் செயலை ஒற்றர் மூலம் நலங்கிள்ளி உணர்ந்தனன்; உடனே தன் படையைப் பகையர சன் மீது செலுத்தினன். சோழர் இருவர்க்கும் போர் தொடங்கியது. போரில் இருதிறப் படைக ளுக்கும் பெருத்த சேதம் விளைந்தது. இறுதியில் பெருவீரனகிய நலங்கிள்ளியின் எதிர் நின்று போர்

புரிய ஆற்றலற்று நெடுங்கிள்ளி ஆவூர் என்ற ஊரில் உள்ள கோட்டையுள் புகுந்து ஒளிந்து கொண்டான். நலங்கிள்ளி அவனை விடாமல் துரத்திச் சென்று ஆவூர்க் கோட்டையைத் தன் பெரும் படையுடன் வளைத்துக்கொண்டனன். நெடுங்கிள்ளி கோட்டைக் கதவினைத் தாழிட்டு உள்ளேயே அமைதியாய் இருந்தனன். நலங்கிள்ளியும் தன் முற்றுகையை விடவில்லை. இதனால் ஆவூர் மக்களுக்குப் பெரிதும் துன்பம் விளைந்தது. உணவுப் பொருள்கள் கிடைக்காமையால் அவர்கள் பசியால் வாடினார்கள். அவன் படைவீரர்களும் களைத்தார்கள்.

இச்செய்தி கோவூர் கிழாருக்குத் தெரிந்தது. அவர் ஆவூரை விரைந்து சென்று அடைந்தார். ஆவூர் முற்றுகையினால் இருதிறப் படைகட்கும், ஆவூர் மக்களுக்கும் விளைந்த பெருந்துன்பம் அவர் நெஞ்சைப் பிளந்தது; நெடுங்கிள்ளிக்குத் தம் வருகையை உணர்த்தினர். புலவர் வருகையை உணர்ந்த நெடுங்கிள்ளி கதவைத் திறக்கச் செய்து அவரைப் பணிவுடன் வரவேற்று முகமன் கூறினன். புலவர் அவனை நோக்கி, "அரசே! நின்னுடைய செயலால் குடிமக்கள் மிகவும் வருந்துகின்றனர். யானைகள் தங்கள் பிடிகளுடன் குளங்களில் நீராடா; நெய்கலந்த உணவைப் பெறு; வெறுந் தரையில் பசிக் கொடுமை தாங்காமல் தங்கள் துதிக்கைகளைச் சுழற்றி எறிந்து இடிபோல் முழங்கி வருந்துகின்றன. குழந்தைகள் பாலில்லாமல் அலறுகின்றன. மகளிர் பூச்சூட மறந்தனர். பருக நீருமின்றி மக்கள் கூவும் குரல் நின்

RangaRakes tamilnavarasam.com

செவிப் படவில்லையா? உயிர்களெல்லாம் இங்ஙனம் வருந்தவும் நீ மட்டும் கதவை யடைத்துக் கொண்டு கவலை யற்று வாழ்வது நீதாகும். நீ தரும வழியில் நடப்பவன் என்பது உண்மையாயின் நின் பகைவனாகிய நலங்கிள்ளியுடன் போர்புரிந்து அவனை வெல்வாயாக. இன்றேல் கோட்டைக் கதவினைத் திறந்து விடுக. அவ்வாறு செய்யாமல் கோட்டைக்குள் ஒளிந்து வாழ்வது நாணத் தகுவது," என்று அரசனென்றும் கருதாமல் உண்மை யறத்தை அறிவுறுத்தினார். புலவர் கூறிய பொருளுரையால் மனமாற்றம் அடைந்த நெடுங்கிள்ளி கோட்டையைத் திறந்துவிடத் தீர்மானித்தான். எனினும் தாயத்தான் மீது கொண்ட பகைமை தீரவில்லை. எனவே அவன் ஆவூர்க் கோட்டையினின்று தன் படைகளுடன் உறையூரை யடைந்து அரசு செலுத்தலானான். நலங்கிள்ளி இதனை அறியவில்லை; ஆவூர்க் கோட்டையைப் பற்றிய மகிழ்ச்சியில் திளைத்து வாழ்ந்தான். தங்கள் பெருந்துன்பத்தைப் போக்கிய கோவூர் கிழாரை ஆவூர் மக்கள் மனமார வாழ்த்தினர்.

நலங்கிள்ளி ஆவூர்க் கோட்டையில் இருந்த போது வறுமையால் வருந்திய இளந்தத்தர் என்ற புலவர் அவனை வந்து கண்டனர். நலங்கிள்ளி அவர் வறுமை நிலையை உணர்ந்து வரிசைகள் பல அளித்துப் போற்றினான். இளந்தத்தர் நலங்கிள்ளியை வாழ்த்தி விடைபெற்றுத் திரும்பினார். அவர் நெடுங்கிள்ளியையும் கண்டு பரிசில்பெற விரும்பினார். அவன் உறையூரிலிருப்பதாக அறிந்து அங்குச் சென்று அவனைக் கண்டார். தாம் நலங்

கிள்ளியைக் கண்டு பரிசில் பெற்றதையும் அவனிடம் நவின்றார். ஐயமே உருக்கொண்ட நெடுங்கிள்ளி புலவர் உரைத்ததுகேட்டு அவர்மீது சந்தேகங் கொண்டான். "இவன் நலங்கிள்ளியின் ஒற்றனே. புலவர் வேடத்தில் ஒற்றறிந்து செல்லவே இங்கு வந்துள்ளான்," என்று அவன் எண்ணினன். ஒற்றரென்று ஐயுற்றவர்க்கு விதிக்கப்படுவது மரண தண்டனையேயாம். ஆதலின் நெடுங்கிள்ளி இளந்தத்தரைக் கொல்ல முடிவு செய்தான்; தண்டனை நிறைவேற்றப்படும் வரையில் அவரைக் காவலில் வைத்தான்.

இச்செய்தியைத் தம்மூரில் இருக்கையில் கோவூர் கிழார் அறிந்தார். ஓடோடியும் உறையூரை வந்தடைந்தார். பிறர் துயரங்கண்டு சகியாத அப்பெருந்தகையார் அறிவுடைப் புலவர் ஒருவரின் அழிவைக் கேட்டு அகம் வருந்தாமல் இருப்பாரா? அவர் நெடுங்கிள்ளியைப் பார்த்து, "வேந்தே! இவரை ஒற்றர் என்று ஐயுறவேண்டாம். இவர் என்போன்ற புலவரே யாவர். வறுமைக் கொடுமையால் நலங்கிள்ளியைக் கண்டு பரிசில் பெற்று வரும் வழியில் நின்னையும் காண வந்தார். உங்கள் இருவர்க்கும் உள்ள பகையை அவர் சிறிதும் உணரார். கள்ளமில்லாத உள்ளத்தவர் இப்புலவர். பழுத்த மரம் எங்கிருப்பினும் அதனை நாடி வௌவால் முதலியன பறந்து செல்லும். அது போலப் புலவரும் தம்மைக் காக்கும் வள்ளல்கள் எங்கிருப்பினும் அவர்களைத் தேடிச் செல்வர். அவர்கள் அளிக்கும் பரிசைப் பெற்றுச் சுற்றத்தார்க்கும் வறியவர்க்கும் ஈந்து மகிழ்வர். அவ்வருங்குணங்

கள் பலவும் அமைந்தவரே இப்புலவரும். நீ இவரைக் கொல்லக் கருதியது பெருந்தவறாகும். ஆதலால் இப்புலவர் பெருமானை இப்பொழுதே விடுதலை செய்து நினக்கும் நின் மரபுக்கும் ஏற்படக் கூடிய வசையை நீக்கிக்கொள்க,'' என்று நெடுங்கிள்ளியின் மனத்தில் பதியுமாறு தெளிவாகவும் உருக்கமாகவும் எடுத்தியம்பினர். நெடுங்கிள்ளி தான் செய்ய விருந்த குற்றத்தை நினைத்து மனம் மிக வருந்தினன். தன்னைப் பழியினின்றும் காத்த கோவூர் கிழாரை வாழ்த்தினன்; உடனே இளந்தத்தரை விடுதலை செய்து அநேக பரிசுகளை வழங்கி அவரிடம் மன்னிப்புப் பெற்றான். இளந்தத்தர் தம்மையும் அரசனையும் காத்த கோவூர் கிழாரை வாழ்த்தி விடைபெற்றுச் சென்றார்.

நெடுங்கிள்ளி உறையூரின் கோட்டையைக் கைப்பற்றி யிருப்பதை அறிந்த நலங்கிள்ளி பெரும் படையுடன் சென்று உறையூரை முற்றுகையிட்டான். எங்குச் சென்றாலும் விடாமல் தொடர்ந்து போர் செய்யவரும் நலங்கிள்ளியின் செயல் நெடுங்கிள்ளிக்கு மிக்க கோபத்தை விளைவித்தது. ஆதலால் அவன் எவ்விதத்தாலும் நலங்கிள்ளியை ஒழித்துவிடுவதென்று முடிவுசெய்து போர் தொடங்கினன். மீண்டும் பெரும் போர்! இம்முறை விளைந்த சேதத்துக்கு அளவு கூற இயலாது.

இந்நிகழ்ச்சி அறிந்த கோவூர் கிழார் முன்னிலும் பன்மடங்கு உளம் வருந்தினர். மன்னர் இருவரும் சிறந்த அறிஞர்; கவிபாடும் புலமை வாய்ந்தவர்; போரால் விளையும் தீமைகளை நன்குணர்ந்தவர். அங்ஙனமிருந்தும் அவர் போர் மேற்கொண்டு

பொது மக்களைத் துன்பத்திற்குள்ளாக்குதல் கோவூர் கிழாரின் நெஞ்சை வருத்தியது. எங்ஙன மேனும் அவர்களிடையே ஒற்றுமையை உண்டாக்க வேண்டுமென்று கருதிப் புறப்பட்டார்; போர்க் களத்தை அடைந்தார். அவர் நலங்கிள்ளியையும், நெடுங்கிள்ளியையும் நோக்கி, "அரசர்களே! நான் கூறுவதைச் சிறிது பொறுமையுடன் கேட்கவேண் டும். கேட்ட பிறகு நீவிர் விரும்பியதைச் செய்க. நம்மோடு மாறுபட்டுப் போர் செய்பவன் நும் பகைவனாகிய பனம்பூமாலை யணிந்த சேரனு மல் லன்; வேப்ப மாலையை யணிந்த பாண்டியனு மல் லன். நீவிர் இருவரும் ஆத்திமாலை யணிந்த சோழர்களே. உங்களில் எவர் தோற்பினும் தோற்பது சோழர் குடியே யாகும். இருவரும் வெற்றிகொள்வது என்பது முடியாது. ஆதலால் உங்கள் செயல் சோழர் குடிக்கே பெரும் பழியை விளைப்பதாகும். இச்செய்தி நும்பகை மன்னரான சேர பாண்டியர்க்குப் பெரு நகையை விளைப்பதா கும். ஆதலால் இப்போரை இதனுடன் நிறுத்தி ஒன்றுபட்டு வாழ்ந்தால் உங்கட்கும் நன்மையுண்டு, உம் குடிக்கும் பெருமை யுண்டு!'' என்று அவர் கள் மனங் கரையுமாறு எடுத்துரைத்தார்.

'குடிக்கு வசை ஏற்படும்,' என்று புலவர் கூறி யது கேட்டு வேந்தர் இருவரும் போரை நிறுத்தி னர். தம் செயலால் தம் குடிக்குப் பழி நேர்வதை அவர் விரும்புவாரோ? நலங்கிள்ளி கோவூர் கிழாரை நோக்கி, "புலவர் பெருந்தகையே! வணக் கம். தங்கள் அறிவுரைக்கு நன்றி செலுத்து கிறேன். அரசர் பணிவுடன் என் நாட்டையே

RangaRakes tamilnavarasam.com




கோவூர் கிழார் போரை நிறுத்துமாறு நலங்கிள்ளிக்கும் நெடுங்கிள்ளிக்கும் அறிவுரை கூறல்

RangaRakes
tamilnavarasam.com

கேட்பினும் மகிழ்ச்சியோடு தருவேன். அவசியம் ஏற்பட்டால் என் உயிரையும் வழங்கத் தவறேன். அங்ஙனமின்றி எல்லையும் என் படைகளையும் இழித்துரைப்பவர், தூங்குகின்ற புலியின் மீது இடறிவிழுந்த குருடனைப்போல, அழிவுறுதல் திண்ணம்,'' என்று வீரமொழி பகர்ந்தான். கோவூர் கிழார் கூறிய நல்லுரைகளால் மனந் திரும்பிய நெடுங்கிள்ளி, நலங்கிள்ளி கூறிய வீரவுரை கேட்டு முற்றும் மாறியவனுகித் தன் பகைமை ஒழிந்து நலங்கிள்ளியைத் தழுவிக்கொண்டு தன் பிழையைப் பொறுக்குமாறு வேண்டினன். உடனே நலங்கிள்ளி ஆனந்தக் கண்ணீர் சொரிந்து நெடுங்கிள்ளியைத் தழுவிக்கொண்டான். கோவூர் கிழார் மனம் மகிழுமாறு இருவரும் பகைமை மாறி நண்பராயினர். இருதிறப் படைகளும் போரை ஒழித்து நட்புக்கொண்டு ஆரவாரம் செய்தன. குடிமக்களுக்கு இச் செயல் வியப்பினையும், மகிழ்ச்சியையும் விளைவித்தது. அவர்கள் கோவூர் கிழாரின் திறமையைப் பலவாறு புகழ்ந்து போற்றினர்கள். அவர் புகழ் தமிழ்நாடு முழுவதும் பரவியது.

பின்னர் நலங்கிள்ளி கோவூர் கிழாரை அரண்மனைக்கு அழைத்துச் சென்று போற்றினன். நெடுங்கிள்ளியும் அவனுடன் இருந்தான். மூவரும் சில நாட்கள் இன்பமாகக் கலந்து பழகினர். நலங்கிள்ளி புலவரிடம் முன்னினும் பன்மடங்கு அன்பும் மதிப்பும் உடையவனுனன்; அவர்க்குக் கணக்கற்ற பொருள்களைப் பரிசாக வழங்கினன்; புலவரை எப்பொழுதும் தன்னுடனேயே இருக்குமாறு

RangaRakes tamilnavarasam.com

வேண்டிக் கொண்டான். புலவரும் அரசனுடன் இன்பமாய் வாழ்ந்து வந்தனர்.

இளைஞர்களே! கோவூர் கிழாருடைய உயர் குணங்களாலன்றோ அவர் பெருஞ் சிறப்படைந் தார். நீங்களும் அவர் போல உயர் குணமுடைய வர்களாகத் திகழ்வீர்களாக. பிறர்க்குதவி செய்யும் பெருங் குணம் உங்களிடையே பொலிவதாக. 'ஒன்று பட்டால் உண்டு வாழ்வு! நம்மில் ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வு,' என்று நம் அமர கவி பாரதியாரும் கூறுகின்றனரன்றோ! ஆகவே ஒற்றுமை என்னும் உயர் குணம் உங்களிடம் என்றும் நிலவுவதாக.



RangaRakes tamilnavarasam.com

# அரும்பத அகராதி

அகந்தை - கர்வம்
அகம் - மனம்
அண்மை - அருகு, சமீபம்
அமரகவி - தெய்வத்தன்மை பொருந்திய புலவர்
அமர் - போர்
அமைச்சர் - மந்திரி
அரியணை - சிங்காதனம்
அரும்புதல் - தோன்றுதல்
அருவி - மலையிலிருந்து விழும் ஆறு
அவா - விருப்பம்
அவை - சபை
அழுக்காறு - பொறாமை
அளவளாவி - பேசிப்பழகி
ஆ - பசு
ஆண்டு - வயது, வருஷம்
ஆர்வம் - பேராவல்
ஆற்றல் - வலிமை, திறமை
இசை - புகழ்
இணை - சமம்
இரப்பவர் - யாசிப்பவர்
இழுக்கு - குற்றம்
இறுதி - முடிவு
இன்னல் - துன்பம்
ஈடு - சமம்
ஈனசுரம் - மெல்லிய குரல்
உந்துதல் - தூண்டுதல்
உவகை - மகிழ்ச்சி
உள்ளுதல் - நினைத்தல்
உறுதல் - அடைதல்
உறையுள் - வசிக்குமிடம்
உன்னி - எண்ணி
ஊதியம் - பயன்
எடுத்துக்காட்டு - உதாரணம்
ஏவல் - கட்டளை
ஏற்புடைத்து - தக்கது
ஏறு - ஆண்சிங்கம், காளை
ஐயம் - சந்தேகம்
ஒற்றர் - வேவுகாரர்
கடையெழுவள்ளல்கள் - பாரி, காரி, ஓரி, ஆய், பேகன், நள்ளி, அதியமான்.
கமழ்ந்தது - வீசியது
கயவன் - கீழ்மகன்
கரம் - கை
கவி - செய்யுள், புலவர்
கறங்குதல் - ஒலித்தல்
கறவை - பசு
கற்பகதரு - கற்பக மரம்
காவலர் - அரசர், காவற்காரர்
கிழமை - உரிமை
குவளை - பாத்திரம்
குழல - புல்லாங்குழல்
குறிக்கோள் - இலட்சியம்
குறுகி - நெருங்கி
குறுநில மன்னன் - சிற்றரசன்
கொற்றம் - வெற்றி
கொற்றவன் - அரசன்
கோடாது - வளையாது
சமர் - சண்டை
சான்றோர் - மேலோர்
சுனை - மலையிலுள்ள நீர்நிலை
செருக்கு - கர்வம்
செறிதல - நெருங்கியிருத்தல்
சேதம் - அழிவு
சோணாடு - சோழநாடு.
தகுதி - நிலைமை ; பெருமை
தநயன் - புதல்வன்
தமிழகம் - தமிழ் நாடு
தருப்பை - ஒருவகைப் புல்
தறுவாய் - சமயம்
தாயாதியர் - பங்காளிகள்
திகழ - விளங்க
திங்கள் - சந்திரன்
திரிபு - ஒன்றை மற்றொன்றாகக் கொளல்
திரிந்த - மாறிய
திரு - அழகு
திறம் - அறிவு

RangaRakes tamilnavarasam.com

தீந்தமிழ் - இனிய தமிழ்
துணுக்கு - அச்சம்
துலை - தராசு
துறக்கம் - சுவர்க்கம்
தொலைவு - தூரம்
நரை - வெண்மயிர்
நவின்றார் - கூறினார்
நாட்டம் - எண்ணம்
நாமகள் - சரசுவதி
நால்வகைப்படை - தேர், யானை, குதிரை, காலாட்படைகள்
நிமித்திகன் - சோதிடன்
நிலவுதல் - பொருந்துதல்
நீடு - நீண்டகாலம்
நீர்வேட்கை-தாகம் [சிவபிரான்
நீலமணி மிடற்று இறைவன் -
பணியாளர் - வேலைக்காரர்
பணிவு - அடக்கம்
பண்டு - முன்பு
பண்பு - குணம்
பரம்பரை - வம்சம்
பரிசில் - வெகுமதி
பரிவாரம் - சூழ்ந்திருப்போர்
பரிவு - அன்பு
பாவை - பதுமை
பிடி - பெண்யானை
பிணிக்கும் - கட்டுப்படுத்தும்
புகலிடம் - அடைக்கலம் அடையும் இடம்
புரத்தல் - காப்பாற்றுதல்
புரவலர் - அரசன்
புலமை - அறிவு [செய்தல்
புறக்கணித்தல் - அசட்டை
புனல் - நீர்
புன்சொல் - அற்பமான சொல்
பூமகள் - இலக்குமி
பெருமிதம் - பெருமை
பேறு - பாக்கியம்
பொருவது - போர் செய்வது
பொலிகிறது - விளங்குகிறது
பொழில் - மலர்வனம்
பொறிக்கப்படல் - எழுதப் படு
பொறை - பொறுமை [தல்
பொன்னுடு - தேவருலகம்
பொன்னி - காவிரியாறு
மணி - இரத்தினம்
மதிநுட்பம் - நுண்ணறிவு
மரபு - வம்சம்
மழலை - குழந்தைகள் பேசும் பொருளற்ற சொல்
மறச் செயல் - பாவச் செயல்
மாண்பு - பெருமை
மாரி - மேகம்
மாவட்டம் - ஜில்லா
மானி - மான முடையவன்
மிடறு - கழுத்து
முகமன் - உபசார மொழி
முடி - கிரீடம்
முனிவு - சினம்
முரசு - பேரிகை
முழங்க - ஒலிக்க [வா
மூதாட்டியார் - வயது முதிர்ந்த-
யாழ் - வீணைபோன்ற இசைக் [கருவி
யுகம்-நீண்டதொரு கால அளவு
வசை - பழி
வருவாய் - வருமானம்
வரையாது - அளவில்லாமல்
வழுவாது - தவறாது
வள்ளன்மை-கொடைத் தன்மை
வள்ளல் - கொடையாளி
வறிஞன் - ஏழை
வாழ்க்கைத்துணைவி - மனைவி
விளிம்பு - ஓரம்
விழுமியோர் - மேலோர்
வெகுண்டு - கோபித்து
வென்றி - வெற்றி
வையம் - பூமி

RangaRakes tamilnavarasam.com